AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை | எண்: 07 எழுத்து: 07 ஜுலை 2013 | www.aharam.lk

ரமழானைத் திட்டமிடுவோம்

03 JUL 2013

நீங்கள்தான் நம்பர் 1



வண்ணத்துப் பூச்சிகள்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்ரா கல்வி நிலைய நூல் அறிமுகம்

அஷ்ஷெய்க். எம்.எம்.எம். அஸாம் எழுதிய நூல்கள்



மும்மொழி அரபுச் சொற்களஞ்சியம்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அரபுச் சொற்களைக் கற்பதற்கு ஏதுவாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அன்றாடம் கதைப்பதற்குத் தேவைப்படும் சொற்கள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளன. அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய பல்துறை சார்ந்த சொற்கள் 40 தலைப்புகளின் அடிப்படையில் பிரித்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் அரபு மொழியைக் கற்க விரும்புவோருக்கு பெரிதும் துணையாக நிற்கக்கூடியது. மிக முக்கியமாக ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அரபு மொழியைக் கற்க விரும்புபவர்கள் இந்நூலைத் துணையாகக் கொள்ள முடியும்.



ஸர்:ஃப் நூல்

தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்கள் அரபுமொழியின் மிக முக்கியமான ஒரு பகுதியான ஸர்ஃப் கலையைக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அரபு மொழியைத் திறம்படக் கற்பதற்கு மிகவும் உறுதுணையாக அமையும் ஸர்ஃப் என்ற அரபு இலக்கணப் பகுதி இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. ஆரம்பமாகக் கற்பவர்களுக்கு இப்பகுதி கடினமாக அமைவது இயல்பானது. இதனை இலகுபடுத்தும் வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அடிப்படை வினைகளிலிருந்து அறிந்து கொள்ள வேண்டிய அனைத்து வகையான வினைகளினதும் ஸர்ஃப் செய்யும் முறை சிறப்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்குரிய பயிற்சிகளும் இந்நூலிலே வழங்கப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார) சான்றிதழ் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் இந்நூலினைத் துணையாகக் கொள்ளலாம். இந்தப் பரீட்சைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் அஸ்ஸர்ஃப் எனும் பகுதி இந்நூலிலே உள்ளடக்கப்பட்டுள்ளது.



இலகுவழி அடிப்படை அரபு இலக்கணம்

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அரபுமொழி இலக்கணத்தை இலகுவாகக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாகத் தொகுக்கப்பட்டுள்ள நூல். அரபு எழுத்துக்களின் அறிமுகம் முதல், அரபு மொழியினைக் கற்றுக் கொள்வதற்கான அமைப்பில் படிப்படியாக ஒவ்வொரு தலைப்பின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்துக்குமான பயிற்சிகள் இந்நூலிலே வழங்கப்பட்டுள்ளமை கற்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் மனதில் பதித்துக் கொள்ள உதவும் சிறந்த உத்தியாகும்.

க.பொ.த. உயர் தரத்தில் அரபு மொழியை ஒரு பாடமாகக் கற்பவர்களும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார) சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் இந்நூலைத் துணையாகக் கொள்ளலாம். இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பாடத்திட்டம் இந்நூலிலே உள்ளடக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கான நாளாந்தப் பதிவேடு மற்றும் பெற்றார் ஆசிரியர் கையேடு



சந்தர்ப்ப துஆக்கள்



அஹதிய்யா மற்றும் அல்குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருக்கும் நூல். பாலர் பிரிவு முதல் தரம் ஒன்பது வரைக்குமான மாணவர்களுக்குத் தேவைப்படும் சந்தர்ப்ப துஆக்கள் இந்நூலில்







தொழுகைக்குப் பின்னர் ஓதும் துஆக்கள் அடங்கிய அட்டை

தமிழ்—சிங்களம்—ஆங்கிலம்

இஸ்லாமிக் புக் ஹவுஸ் 77, தெமடகொட வீதி கொழும்பு - 09

011-2684851 www.ibh.lk

விளம்பர அனுசரணை

இக்ரா கல்வி நிலையம், த.பெட்டி இல. 750, கொழும்பு

www.iqracolombo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 ஜுலை, 2013 எழுத்து: 07

உள்ளே...

ரமழானைத் திட்டமிடுவோம் 36



நீங்கள்தான்
'Number One' 21

13



மனதை மயக்கும்
வண்ணத்துப் பூச்சிகள் 06



பாடங்களை
மீட்டுவதற்காக... 23

கவிதைச் சாரல் 38

மாணவர் அகரம் 09

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, முன்னாள் தேசிய கல்வி நிறுவகம்)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

பாடத்திட்டம்

கணிதம்	30	தமிழ்	26
விஞ்ஞானம்	33	புலமைப் பரிசில்	39

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமட்டகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *editor@aharam.lk*
www.aharam.lk

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள தம்பி தங்கைகளே,

இரண்டாம் தவணைப் பரீட்சை முடிந்து விட்டது. பரீட்சைப் பெறுபேறுகள் பலருக்கு மகிழ்ச்சியையும் இன்னும் பலருக்கு துக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும். ஆனாலும், வெகு சிலரே தமது இலட்சியத்தை அடைந் திருப்பீர்கள்.

நீங்கள் நிர்ணயித்த இலக்கை இந்தப் பரீட்சையில் அடைந்து கொண்டீர்களா என்பதனை மட்டிட்டுப் பாருங் கள். அடைந்து கொண்டீர்கள் என்றால் இறைவனைப் புக ழுங்கள்; நன்றி செலுத்துங்கள். அவனே உங்களுக்கு இந்த வெற்றியைத் தந்தான். இதைவிட மேம்பட்ட இலக்கொன் றை அடுத்த பரீட்சைக்காக இப்போதே நிர்ணயித்துக் கொள்ளுங்கள். அதனை அடைந்து கொள்வதற்கு பொருத் தமானதொரு திட்டத்தை வகுத்துக் கொண்டு இப்போ திருந்தே தயாராகுங்கள்.

இந்தப் பரீட்சையில் உங்களது இலக்கை நீங்கள் அடைய வில்லையாயின் அதற்காக வருத்தப்பட்டு சோர்ந்து போகா தீர்கள். நீங்கள் விட்ட ஏதோ தவறு உங்களை இலக்கை அடைவதிலிருந்தும் தடுத்திருக்கலாம். எனவே, இறைவனி டம் தௌபா, இஸ்திஃபார் என்பவற்றைச் செய்யுங்கள். காரணத்தைக் கண்டறியுங்கள். உங்களது ஆசிரியர்கள், பெற்றோர், மூத்தவர்களது வழிகாட்டலுடன் இம்முறை நீங்கள் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு அடுத்த பரீட்சைக்கென பொருத்தமான புதிய இலக்கொன்றை அமைத்துக் கொள்ளுங்கள். அதனை அடைவதற்கான நல்லதொரு திட்டத்தையும் தீட்டிக் கொள்ளுங்கள். அடுத்த பரீட்சைக்காக இப்போதிருந்தே தயாராகுங்கள்.

தவணை விடுமுறையோடு நாமெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இறை அருள் சொரியும் மாதம் எம்மை நோக்கி வருகின்றது. "ரமழான் எனக்குரிய மாதம். நானே அதற்குக் கூலியாகின்றேன்" எனஅல்லாஹ் பொறுப்பேற் றுக் கொண்ட சங்கையான மாதம் இது. இந்த மாதத்தை நமக்கு அருளிய அல்லாஹ் நமக்கான இலக்கு ஒன்றையும் வகுத்தளிக்கின்றான். அதுதான் இந்த மாத்தைக் கொண்டு நாமெல்லாம் தக்வா - இறை உணர்வுள்ளவர்களாக வேண்டும் என்பதாகும்.

நாம் ஏன் தக்வா உள்ளவர்களாக ஆக வேண்டும்? தக்வா உள்ளவர்களுக்கே அல்குர்ஆனிலிருந்து வழிகாட்டல் கிடைக்கும் என்பது அல்லாஹ்வின் நிர்ணயமாகும். அல்குர்ஆனின் வழிகாட்டல் ஏன் நமக் குக் கிடைக்க வேண்டும் என ஒரு தர்க்க வினா எழுப்பினால் அதற்கும் அல்லாஹ் அல்குர்ஆனில் விடை சொல்கின்றான். மனிதர்களைச் சுவனத்திலிருந்து வெளி யேற்றும்போது அல்லாஹ் ஒரு வாக்கு றுதியளிக்கின்றான். ''என்னிடமிருந்து ஒரு வழிகாட்டல் உங்களுக்கு வரும். யார் என்னுடைய வழிகாட்டலைப் பின்பற்று கின்றார்களோ அவர்களுக்கு அச்சமும் இருக்காது. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.'' இதுதான் அவனது வாக்குறுதி.

சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட் டவர்களின் அச்சம் இறை தண்டனைக் குள்ளாகி விடுவோமோ! என்பதனைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்? அவர்களின் கவலை சுவனத்துக்கு நம்மால் மீண்டும் வர முடியுமாக இருக்குமா! என்பதனைத் தவிர மற்றொன்றாக இருக்க முடியுமா?

அல்லாஹ்வின் வாக்குப்படி தண்டனை இல்லாத மன்னிப்பும் கவலை இல்லாத மீட்சியும் நமக்குக் கிடைக்குமாக இருந் தால் அதன் வடிவம் என்னவாக இருக்கும் என்பதனை கற்பனை செய்து பாருங்கள். அதுதான் மேன்மைமிகு சுவனம்.

அந்தச் சுவனத்தை நாம் அடைந்து கொள்ள இறைவன் விதித்த நிபந்தனை தான் இறை உணர்வு. அதற்காகத்தான் ரமழான்.

உங்களது குறுங்கால இலக்கான பரீட்சை வெற்றிக்கும் நெடுங்கால இலக் கான வாழ்க்கையின் வெற்றிக்குமாக தொடர்ந்து வரும் காலத்தை திட்ட மிட்டுப் பயன்படுத்தினால் நீங்கள் வெற்றியாளர்தான். இன்ஷா அல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

தம்பி, தங்கைகளே!

அல்குர்ஆன் கூறும் கதைகள் எனும் இத் தொடரிலே இது வரையில் சில நபிமார்களது சாதனைகளை நாம் உங்களுக்கு அறிமுகம் செய்தோம். தொடர்ந்தும் நாம் அறிமுகம் செய்ய முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ். இவ்விதலே அஸ்ஹாபுஸ் ஸப்த் என வரலாற்றில் அறிமுகமாகிய சமூகத்தாரைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

அஸ்ஹாபுஸ் ஸப்த் என்போர் தமிழில் சனிக்கிழமை வாசிகள் என அழைக்கப்படுவர். இவர்கள் பனூ இஸ்ராயீல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். பனூ

இறை சாபத்தின் சமூகம்;

அஸ்ஹாபுஸ் ஸப்த்

இஸ்ராயீல் சமூகத்தவர்களுக்கு அல்லாஹ் அதிகமான இறைத் தூதர்களை அனுப்பி வைத்தான். இச்சமூகத்தின் முக்கியமான நபிமார்களுள் ஒருவர்தான் நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்.

பனூ இஸ்ராயீல் சமூகத்தவர்கள் வாரத்தில் ஒரு நாளை அல்லாஹ்வின் வழிகாட்டலை கற்றுக் கொள்ள ஒதுக்கினார்கள். அன்றைய தினத்தில் அனைத்து உலக வேலை சோலிகளிருந்தும் ஒதுங்கிக் கொள்வார்கள். அல்லாஹ்வை புகழ் பாடுவதிலும் துதி செய்வதிலும் தியானத்திலும் அந்நாளில் ஆழ்ந்து போவார்கள். அல்லாஹ் தமக்கருளிய அருட்கொடைகளை எண்ணி உள்ளம் நெகிழ்ந்து நிற்பார்கள். அல்லாஹ் அத்தினமாக வெள்ளிக்கிழமையை தீர்மானித்தான். என்றாலும் சனிக்கிழமை தினத்தையே அவர்களது உள்ளங்கள் வேண்டி நின்றன.

அவர்களது எண்ணம் நிறைவேறியது. அவர்கள் வணங்கவும் வழிபடவும் திக்ர், தஸ்பிஹ்களில் ஈடுபடவும் சனிக்கிழமை தினம் அனுமதிக்கப்பட்டது. தமது எதிர்பார்ப்பு நிறைவேறியதில் அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சி. நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நினைவூட்டுபவராகவும் வழிகாட்டுபவராகவும் தம் பொறுப்பை நிறைவேற்றுவதில் சிரத்தையும் பிரயத்தனமும் எடுத்துக் கொண்டார்கள்.

பனூ இஸ்ராயீல் சமூகத்தவர்களோ வழக்கம் போல் சனிக்கிழமை தினத்தை கண்ணியப்படுத்தினர். புனித நாளாக அதைக் கருதினர். அன்றைய தினம் வணக்க வழிபாடுகளில் திழைத்தனர். இவ்வாறே நாட்கள் உருண்டோடின. இரவும் பகலும் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி வந்தன. பனூ இஸ்ராயீல் சமூகத்தின் ஒரு குழுவினர் சனிக்கிழமை நாளில் செய்த தந்துரோபாய செய்தி பனூ இஸ்ராயீல் சமூகத்தின் மற்றொரு சாராருக்கு வந்து சேர்ந்தது. அச்செய்தி தமக்கான அல்லாஹ்வின் புறத்தால் வந்த சோதனை என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே! அதை அவர்கள் அறியத் தவறி விட்டனரே!

அல்லாஹ் அவர்களை சோதிக்க நாடினான். சோதிப்பதற்காகத்தானே மரணமும் வாழ்வும் படைக்கப்பட்டிருக்கிறன. வாழ்வு சோதனையால் சூழப்பட்டிருக்கிறது. பனூ இஸ்ராயீல்கள் சனிக்கிழமை வாசிகளின் செய்தி அறிந்த உடன் தம் பொறுப்பை உணர்ந்து நிறைவேற்ற உழைத்திருக்க வேண்டும் என்பதுதான் அர்ஷின் நாயகன் அல்லாஹ்வின் எதிர்பார்ப்பு.

தமது சமூகத்தார் சனிக்கிழமை தினத்தில் நடந்து கொள்கின்ற முறை பற்றி அறிந்த பனூ இஸ்ராயீல்களில் ஒரு சாரார் இன்னுமொரு சாராரை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக எத்தி வைத்தனர். அதன் ஆபத்தை உணர்த்த முயற்சித்தனர். அவர்களோ அதை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. நமக்கு ஏன் வீண் வேலை என்று எண்ணினர். தாமும் தம் பாடும் என்று இருந்து விட்டனர்.

பனூ இஸ்ராயீல் சமூகத்தின் சோதனையாய் அமைந்த சனிக்கிழமை வாசிகள் அத்தினத்தில் செய்த வேலை இதுதான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَنْ قَامَ رَمَضَانَ

إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ (مُتَّفَقٌ عَلَيْهِ)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். "யார் ஈமானுடனும் தன் செயல்களைக் கண்காணித்தும் (இஹ்திஸாப்) ரமழானில் நின்று வணங்குகின்றாரோ அவருடைய முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்." (அல்புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் அறிமுகப்படுத்துகின்ற வணக்க வழிபாடுகளுள் நோன்பும் ஒன்றாகும். இத்தகைய நோன்பை நோற்பது விதியாக்கப்பட்ட மாதமான ரமழான் எம்மை இறை உணர்வு உள்ளவர்களாகவும் பணிவுள்ளவர்களாகவும் ஆக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

இறை உணர்வையும் பணிவையும் எம்முள் வரவழைத்துக் கொள்வதற்காக இஸ்லாம் ரமழானில் இரு பெரும் அமல்களை விதியாக்கியுள்ளது. அவைதான் பகல் வேளையில் நோன்பு நோற்பதும் இரவில் நின்று வணங்குவதுமாகும். ரமழானில் நோன்பு நோற்பது தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்.

"இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கின்றது. (அதன் மூலம்) நீங்கள் இறை உணர்வுள்ளவர்களாக திகழக் கூடும்." (2:183)

அதேபோன்று ஒரு மனிதனிடத்தில் பணிவை ஏற்படுத்தி அவனை புனிதனாக மாற்றக் கூடிய ஒன்றாக தொழுகை காணப்படுகின்றது. எனவேதான், நபியவர்களும் இந்த உலகத்தில் எனக்கு மிகவும் விருப்பமானது தொழுகைதான் என்று அடிக்கடி கூறுபவர்களாக இருந்தார்கள்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் ரமழானில் நின்று வணங்குவதைப் (தொழுகை) பற்றி பேசுவதைக் காண்கின்றோம். ரமழானில் நின்று வணங்குவதன் மூலம் நாம் முன்னர் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான் என்று கூறிய நபியவர்கள் இரண்டு விடயங்களை அதற்கான நிபந்தனைகளாகவும் இட்டிருக்கின்றார்கள்.

முதலாவது விடயமான ஈமான் என்றால், இறைவன் சம்பந்தமாக ஒரு முஸ்லிம் எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தல் அவசியமோ அது அவனது உள்ளத்தில் முற்றிலும் பசுமையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

இரண்டாவது விடயமான இஹ்திஸாப் என்றால், மனிதன் இறைவனின் திருப்தியை நாடுபவனாக தனது எண்ணங்களையும் செயல்களையும் கண்காணிக்க வேண்டும் என்பதாகும்.

இந்த இரண்டு விடயங்களையும் தூய்மையான முறையில் நிறைவேற்றி ரமழானிலே நின்று தொழுகின்றவனின் பாவங்கள் மன்னிக்கப்படுவதை மேலுள்ள ஹதீஸின் வாயிலாக நபியவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

ரமழானிலே இரவு வேளையில் நின்று வணங்குவது சுன்னத்தாக ஆக்கப்பட்டுள்ளது. இரவு வேளைகளில் நின்று வணங்குவது இறைவனின் உண்மையான அடியார்களுடைய பண்பு என்பதை அல்குர்ஆனும் சுட்டிக்காட்டுகின்றது.

"இன்னும் அவர்கள் எத்தகையோரெனில் தங்கள் இரட்சகனை சிரம்பணிந்தவர்களாகவும், நின்றவர்களாக்வும் (வழிபாட்டில்) இரவைக் கழிப்பார்கள்."

(அல்புர்கான் : 64)

(27ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகத் தோல்விகளைத் தகர்த்தெறிந்து இறுதிவரை போராடுதல்

ஒரு விடயத்திற்காக முயற்சி செய்கின்ற போது அதன் இறுதி வரை முயற்சி செய்ய வேண்டும். இடையில் ஏற்படுகின்ற தடைகள், தற்காலிகத் தோல்விகள் என்பவற்றைக் கண்டு வெற்றி பெறுவதற்கான எமது போராட்டத்தை நிறுத்திவிடக் கூடாது. முழு முயற்சி என்பது இதுதான். அந்த முழு முயற்சிக்குத்தான் வெற்றி கிட்டும். பெரும்பாலும் நாம் வேலைகளை ஆரம்பித்தாலும் இடைநடுவில் அவற்றை நிறுத்திவிடுபவர்களாக இருக்கலாம். அல்லது பெரிய பெரிய தடைகள் தோல்விகள் போன்று வருகின்றபோது அவற்றை கண்டு அஞ்சி எமது முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவோம். இது தோல்வியின் அடையாளம்.

தற்காலிகமான தோல்விகளைக் கண்டு துவண்டு போய்ப் பின்வாங்கிவிடுவதுதான் தோல்விக்கான மிக முக்கியமான காரணம். ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் எல்லோரும் இந்தத் தவறை செய்கிறார்கள்.

இதற்கு உதாரணமாக கூறப்படும் கதைதான் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தங்கம் இருக்கின்றது என்பதைக் கேள்விப்பட்ட ஒருவர் அவ்விடத்தில் 9 அடி வரை தோண்டினார். இவ்வளவு தோண்டியும் கிடைக்காத தங்கம் இனியும் கிடைக்கப் போகிறதா! என்று எண்ணி வெறுப்போடு சென்றுவிட்டான். அவ்விடத்திற்கு வந்த மற்றொருவர் தாகசாந்திக்காக அவ்விடத்தை அண்மித்தபோது அக்குழியை கிணறு என்று எண்ணி எட்டிப் பார்த்தார். ஆனால், அதில் நீர் காணப்படாததால், அக்கிணறு வற்றியிருக்கும் என்று எண்ணி அதனுள் இறங்கி மண்ணைத் தோண்டினார். என்ன ஆச்சரியம், ஒரடி தோண்டியதும் தங்கம் கிடைத்தது. 10 அடி ஆழத்தில் தங்கம் இருப்பது தெரிந்திருந்தால் முதலில் தோண்டியவர் நம்பிக்கையோடு முயன்றிருப்பானல்லவா?

இப்படியொரு நிகழ்வுதான் உஹத் களத்தில் ஏற்பட்டது. உஹத் களத்தில் ஆரம்பத்தில் போராட்டம் முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்தது. அது முழுமையான வெற்றி என்று எண்ணி அனைவரும் யுத்தத்தின் கனீமத் பொருட்களை சேகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அப்போது தாம் ஊடுருவுவதற்காக பலமுறை முயன்றும் ஊடுருவ முடியாதிருந்த காலித்தின் படை ஊடுருவித் தாக்கி முஸ்லிம்களை சிதறடித்தனர். இதனால் முஸ்லிம்கள் திணறினர். திகைத்தனர். முஸ்லிம்களின் பக்கம் இருந்த வெற்றி திரும்ப ஆரம்பித்தது. யுத்தத்தின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது.

ஸஹாபிகள் செய்வதறியாது திகைத்து சிதறிய சந்தர்ப்பத்தில்தான் நபியவர்களின் வீரமும் விவேகமும் துணிவும் தீரமும் வெளிப்பட்டது. அந்தத் திடீர் மாற்றத்தை தோல்வி என்பதாக நினைத்து முஸ்லிம்கள் விரண்டோடியிருந்தால் அது மிகப் பெரும் தோல்வியாக அமைந்திருக்கும். ஆனால், இது தோல்வி அல்ல; தோல்விக்கான அறிகுறி என்பதை அறிந்த நபியவர்கள் அதனைக் களைந்து வெற்றியை நோக்கி நகர முயன்றார்கள். இது ஒரு தற்காலிகத் தோல்வி. இந்தத் தற்காலிகத் தோல்வியை நிரந்தரத் தோல்வி என்று நினைத்திருந்தால் நிலைமை படுமோசமாயிருக்கும். சரி, இந்த தற்காலிகத் தோல்வியை நபியவர்கள் எவ்வாறு எதிர்கொண்டு அதனைத் தகர்த்தெறிவதற்காக இறுதி வரை போராடினார்கள் என்பதைப் பார்ப்போம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒன்பது நபர்கள் கொண்ட தங்கள் தோழர்களின் ஒரு சிறிய கூட்டத்தில் இருந்தார்கள். (முஸ்லிம்) முஸ்லிம்களின் வீரத்தையும் அவர்கள் இணைவைப்பவர்களை விரட்டுவதையும் படையின் பின்பகுதியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த

(20ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

மனதை மயக்கும் வண்ணத்துப் பூச்சிகள்

> "ஒரு நந்தவனத்தின் அழகே அங்கே படபடத்துக் கொண்டிருக்கும் பட்டாம் பூச்சிகள்தான்." கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்

வண்ணத்துப் பூச்சிகளின் அழகு பார்ப்போரை மெய் சிலிர்க்க வைக்கின்றது. வித விதமான வடிவங்களில் பல்வேறு நிறங்களில் வண்ண மயமாய்க் காட்சியளிப்பவைதான் வண்ணத்துப் பூச்சிகள் (Butterflies). இவை 'பட்டாம் பூச்சி' என்றும் அழைக்கப்படுகின்றன. வண்ணத்துப் பூச்சிகளில் 15,000 முதல் 20,000 வரையான பல்வேறு வகை இனங்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக அனைத்துப் பூச்சிகளைப் போன்றும் வண்ணத்துப் பூச்சிகளுக்கும் 6 கால்கள் உள்ளன. அத்தோடு உடல் மூன்று பகுதிகளாக; தலை, நெஞ்சுப் பகுதி மற்றும் வயிற்றுப் பகுதி என்பவற்றையும் இரண்டு உணர் கொம்பு களையும் மிகச் சிறிய இரு கூட்டுக் கண்களையும் உடலை விடவும் பெரிய அழகான வண்ணங்களைக் கொண்ட இரு பக்கமும் சமாந்திரமான இரு சிறகுகளையும் கொண்டுள் ளன. வண்ணத்துப் பூச்சிகளின் உடல் மிகச் சிறிய நுண்ணிய மயிர்களால் சூழப்பட்டுள்ளது.

ஆட்டிக், அண்டாட்டிக் பகுதிகளைத் தவிர்ந்த உலகின் எல்லாப் பாகங்களிலும் வண்ணத்துப் பூச்சிகள் வாழ்கின்றன. ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ற விதத்தில் அவற்றின் ஆயுட் காலம், உடலமைப்பின் தன்மை என்பன வேறுபடுகின்றன.

வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்க்கை வட்டம்

பொதுவாக, வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்க்கை வட்டம் நான்கு கட்டங் களைக் கொண்டமைந்துள்ளது. அவை ஒவ்வொன்றிலும் பல்வேறு அற்புதங்கள் இருப்பதை உன்னிப்பாக அவதானிக்கும் போது கண்டுகொள்ள முடியும். முதற் கட்டம், முட்டை (Egg) என்ற நிலையி லும் இரண்டாம் கட்டம், கம்பளிப் புழு (Cater pillar) என்ற நிலை யிலும் மூன்றாம் கட் டம் அது கூட்டுப் புழுவாகவும் (Pupa or Chrysalis) இறுதிக் கட்ட மாக முழுமையான வண் ணத்துப் பூச்சியாகவும் (Butter fly) பல்வேறு கட்டங்களைக் கடந்து வளர்ச்சியடைகின்றது. ஒவ்வொரு கட் டத்தையும் சற்று விளக்கமாகப் பார்ப் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கட்டம் - முட்டை (Egg)



முட்டையிடத் தயாரான நிலையில் உள்ள பெண் வண்ணத்துப் பூச்சி முதலில் பாதுகாப்பான ஓர் இடமாக ஒரு தாவரத்தின் இலைகளின் அடிப் பாகத்தையோ அல்லது தண்டுப் பகுதியையோ தெரிவு செய்து அதில் ஓரிடத்திலே முட்டைகளை இடுகின்றது. அதிகமான சந்தர்ப்பங்களில் இலையின் தண்டுப் பகுதியில் இடக் காரணம் அம்முட்டைகளுக்கு வெயிலிலும் மழையிலும் இலை குடையாக இருப்பதற்காகவும் சிலபோது இலை சேதத்திற்குள்ளானாலும் தண்டு உறுதியாக இருப்பதால் அதிலிருந்து முட்டைகள் வளர்ச்சியடைய முடியும் என்பதாலுமாகும். எவ்வளவு நுணுக்கமாக செயற்படும் திறனை அல்லாஹ் அவற்றுக்கு வழங்கியுள்ளான் என்று பாருங்கள்.

ஒரு பெண் வண்ணத்துப் பூச்சி ஒரு தடவையில் நூற்றுக்கணக்கான முட்டைகளை இடுகின்றது. சில வண்ணத்துப் பூச்சிகளின் முட்டைகள் எமது வெற்றுக் கண்களால் காண முடியாதளவு மிகச் சிறியதாகவும் அனேகமானவற்றின் முட்டைகள் 2.5 மில்லி மீட்டர் வரையிலும் பல்வேறு நிறங்களில் காணப்படும்.

இரண்டாம் கட்டம் - கம்பளிப் புழு (Caterpillar)

தாய் முட்டையை இட்டு விட்டுச் சென்றதும் அதிலிருந்து கம்பளிப் புழுக்கள் வெளிவருகின்றன. வெளிவரும் கம்பளிப் புழு தனது முட்டையின் மீதி செல்களை உண்டுவிட்டு தனது வாழ்வைத் துவங்குகின்றது. பின்னர் அது அருகில் உள்ள இலைகளையும் உண்ண ஆரம்பிக்கின்றது. கம்பளிப் புழுவாக இருக்கும்போது ஒரு நாளில் தனது உடல் எடையை விடவும் அதிகமான உணவுகளை உட்கொண்டு துரிதமாக வளர்ச்சியடைகின்றது.



கம்பளிப் புழு நிலையில் குளவி, குருவி, ஓணான் எனப் பலவற்றுக்கும் இவை இரையாவதால் பிற உயிரினங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அல்லாஹ் இவற்றின் உடல் நிறத்தை அவை வாழும் சூழலின் நிறத்திற்கு ஏற்ப இசைவுபடுத்திக் கொடுத்துள்ளான். எனவே இவை அனேகமாக பச்சை, பழுப்பு, கருப்பு போன்ற நிறங்களில் இருக்கும். அத்தோடு அவற்றின் உடலில் அழகழகான நிற வலயங்கள் 9 முதல் 15 வரை தோன்றும். இன்னும் சில வற்றின் உடலில் மயிர்கள் காணப்படும். இவை உடலில் பட்டால் கடுமையாக அலற்சியை ஏற்படுத்தும். இவைதான் 'மயிர்க் கொட்டி' என அழைக்கப்படுகின்றன. மயிர்க் கொட்டியாக இருக்கும்போது நாம் யாரும் அதனை நெருங்க மாட்டோம். அதுவே அழகிய வண்ணத்தியாக மாறினால் எமது கைகளில் வைத்துக் கொஞ்ச ஆசைப்படுவோம்.

இந்நிலையில் அவை மூன்று ஜோடி முன்னங்கால்களையும் ஐந்து ஜோடி பின்னங்கால்களையும் தலை வயிறு என அனைத்து உறுப்புகளையும் கொண்டவையாக இருக்கும். மூன்று வாரங்களில் அதிகமாக உணவு உட்கொண்டு 2700 மடங்கு அதன் உடல் எடையை அதிகரித்து கொள்ளும். அப்போதுதான் அடுத்த கட்டத்தில் உணவின்றி இருக்க முடியும்.

மூன்றாம் கட்டம் - கூட்டுப் புழு (Pupa)



இந்தக் கட்டத்தில் கம்பளிப்புழு பாதுகாப்பானதொரு இடத்தில் ஒதுங்கி ஒரு மரக்கிளையிலோ அல்லது ஒரு கல்லிலோ தனது பின்னங்கால்கள் மூலம் தலைகீழாக தொங்கிக் கொள்கின்றது. இச்சமயம் உணவுட்கொள்வதும் இல்லை. இதுதான் முக்கியமான கட்டம். கம்பளிப் புழு வண்ணாத்துப் பூச்சியாக மாறுவதற்கான வளர்ச்சிக் கட்டங்கள் அனைத்தும் இங்குதான் நிகழ்கின்றன.

கூட்டுக்குள் அடங்கி 12 மணி நேரங்களுக்குப் பின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும். வண்ணத்து பூச்சிக்கு தேவையான வளர்ச்சியுடன் வயிற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிக்கு மேல் 24 தங்க நிற வண்ணமுடைய வளையங்களும், 12 தங்க நிற வளையங்களும் வயிற்று பகுதிக்கு கீழும் தெரிய ஆரம்பிக்கும். இந்த நிலையில் அவற்றுக்கு கண்கள் தெரியாது. இந்தக் கூட்டுப் புழுவின் உள்ளே முதல் பதினாறு மணி நேரத்தில் பச்சை நிறத்திலான ஒரு திரவம் உருவாகி அதன் உட்பாகங்கள் உருவாகும். அதன் வெளிப் புறத் திலுள்ள செல் அடுக்குகளே இறுதியில் வண்ணத்துப் பூச்சி யின் இறகுகளாக உருமாறும். இந்த நிலையிலும்கூட அவற் றுக்கு வண்ணத்துப் பூச்சி என்ற தோற்றம்கூட இருக்காது.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அதன் வயிற்றில் இருக்கும் திரவத்தை இறக்கைப் பகுதிக்கு அழுத்த (Pump) அடுத்த பதி னைந்து நிமிடங்களில் அது பறக் கத் தயாராகி கூட்டிலிருந்து மெதுவாக வெளியேறிவிடும். என்றாலும் உடனே பறக்க முடி யாது. இரண்டு மணி நேரத்துக் குள் அதன் இறக்கைகளை உலர வைத்துக் கொள்ள வேண்டும். இதன் பின்னர்தான் முழு வண் ணத்து பூச்சியாக உருவெடுக் கும்.

நான்காம் கட்டம் - வண்ணத்துப் பூச்சி

(Butterfly)



அழகிய வண்ணத்துப் பூச்சி. தற்போது அதற்கு ஆறு கால்க ளும் நான்கு இறக்கைகளும் இருக்கும். உயர்ந்த உணர் திறன் கொண்ட அதன் இரண்டு கூட் டுக் கண்களிலும் 6000 கண்ணாடி வில்லைகள் (Lenses) காணப்ப டும். புற ஊதா உட்பட அனைத்து வண்ணங்களையும் பார்க்கக் கூடியதாக இருக்கும். அதன் கண்களிலிருந்து மூளைக்கு வரும் 72000 மின் துடிப்புகள் (Electrical Pulses) பார்க்கும் பொருட்களை அர்த்தமுள்ள உருவமாக மாற்றிக் கொடுக்கும்.

இனி அவை பூக்களில் தேன ருந்தப் பறந்து விடுகின்றன. இப் பருவத்தில் தனக்கான துணை யையும் தேடிக் கொள்கின்றன. அயல் மகரந்தச் சேர்க்கைக்கும் உதவுகின்றன.

> வண்ணத்திகள் வாழும் நாட்களில் பிற உயிர்களிடமிருந்து தப்பி வாழ அவை தமது இறக்கைகளில் பெற்றிருக்கும் வண்ணம்தான் காரணம் என அறிவியல் உலகம் கண்டறிந்துள்ளது,

பிறந்தது முதல் அதிகமானவை 3 வாரங்களே உயிர் வாழ்கின்றன. ஆனால், மொனார்ச் (Monarch) வகை வண்ணத்திகள் வருடக்க ணக்கில் உயிர் வாழ்வதோடு, 3000 இற்கும் அதிகமான மைல் கள் கடந்து கண்டம் விட்டு கண்டம் பறந்து செல்லும் திறன் கொண்டவையாகவும் உள்ளன.

வாழும் நாட்களில் பிற உயிர் களிடமிருந்து தப்பி வாழ அவை தமது இறக்கைகளில் பெற்றிருக் கும் வண்ணம்தான் காரணம் என அறிவியல் உலகம் கண்டறிந் துள்ளது. குறிப்பாக , ஹெலி கோனியஸ் நுமட்டா (Heliconius numata) வண்ணத்திகள் தேவை க்கு ஏற்றாற்போல சூழலுக்கு ஏற்ப தம் வர்ணத்தை மாற்றிக் கொள்வதும் பின் இயல்புநி லைக்குத் திரும்புவதும் இங்கி லாந்து மற்றும் பாரிஸ் பல்க லைக்கழக விஞ்ஞானிகளால் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் சில வகை வண்ணங்க ளை மாற்றாது துர்நாற்றத்தை தமது மலக் குழாய் வழியாகப் பீய்ச்சியடித்து எதிரிகளை நிலை குலையச் செய்கின்றன. விஷத் தைக் கக்கி எதிரிகளைக் கொலை செய்யும் கொடுமையான வண் ணத்திகளும் உண்டு. அதே போன்று தமது சிறகுகளில் உள்ள சித்திரங்களைக் காட்டி எதிரி களைப் பயமுறுத்திவிட்டுத் தப் பிக்கும் வண்ணத்திகளும் உள்ளன.

வண்ணத்துப் பூச்சிகளை அல் லாஹ் நான்கு கட்டங்களாக எவ்வாறு படைக்கிறான் என்ப தையும் அவனது படைப்பாற் றலின் மகிமையையும் விளங்கி யிருப்பீர்கள்.

அல்லாஹ்வுக்கே புகழனைத் தும்.

"பூமியில் நீங்கள் சுற்றித்தி ரிந்து படைப்பை எவ்வாறு அல்லாஹ் (ஆரம்பமாகத்) துவங்கி. பின்பு மற்றொரு உற்பத்தியை (எவ்வாறு) உண்டு பண்ணுகி றான் என்பதைப் பாருங்கள், நிச்சயமாக அல்லாஹ் ஒவ் வொரு பொருள் மீதும் ஆற்ற லுடையவன் என்று (நபியே) கூறுவீராக." (அல்அன்ஆம்: 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்

நாடுகளின் தேசிய பறவைகள்

இலங்கை – காட்டுக் கோழி
டென்மார்க் – வானம் பாடி
பர்மா – பெண் மயில்
கனடா – வாத்து
கொலம்பியா – பருந்து
அமெரிக்கா – கழுகு
ஜேர்மன் – வெள்ளைக் கொக்கு
இங்கிலாந்து – ரொபீன்
தென் ஆபிரிக்கா – நீலக் கொக்கு
இந்தியா – ஆண் மயில்

எஸ்.எம். பயாஸ், தரம் 10
அ/நாச்சியாதீவு மு.ம.வி.
நாச்சியாதீவு

நாடுகளும் தலைநகரங்களும்

இலங்கை	- கொழும்பு
இந்தியா	- புது டில்லி
பூட்டான்	- திம்பு
நேபாளம்	- காத்மண்டு
ஆப்கானிஸ்தான்	- காபுல்
பாகிஸ்தான்	- இஸ்லாமாபாத்
மாலைதீவு	- மாலே
சஊதி அரேபியா	- றியாத்
ஈரான்	- தெஹ்ரான்
ஈராக்	- பக்தாத்
பங்களாதேஷ்	- டாக்கா
ஓமான்	- மஸ்கட்

ஜே. அக்ரம்
புத்தளம்

பிரபலங்களின் பிறந்த திகதிகள்

சேர் ஐசக் நியூட்டன் – 1642.12.25
ஆபிரகாம் லிங்கன் – 1809.02.12
தோமஸ் அல்வா எடிசன் – 1847.02.11
மகாத்மா காந்தி – 1869.10.02
அல்பர்ட் ஐன்ஸ்டைன் – 1879.03.13
காமராஜர் – 1903.07.15
டாக்டர் அப்துல் கலாம் – 1931.10.15
பராக் ஒபாமா – 1961.08.04

பஸ்னா புர்கான்
நிக/ மிரிஹம்பிடிய மு.வி.
குருணாகல்

உங்களுக்குத் தெரியுமா?

- பொறுமையில் சிறந்த நபி
  – ஐயூப் (அலைஹிஸ்ஸலாம்)
- அழகில் சிறந்த நபி
  – யூசுப் (அலைஹிஸ்ஸலாம்)
- அரசியல் வாழ்வில் சிறந்த நபி
  – சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்)
- சிறந்த குரல் வளம் பெற்ற நபி
  – தாவூத் (அலைஹிஸ்ஸலாம்)
- இரக்கம் அதிகம் உள்ள நபி
  – யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்)
- தௌஹீத் பிரசாரத்தை 950 ஆண்டுகள் செய்த நபி
  – நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)
- குழந்தையாக இருக்கும்போதே ஞானம் பெற்ற நபி
  – யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்)
- சட்டை மூலம் கண் பார்வை பெற்ற நபி
  – யஃகூப் (அலைஹிஸ்ஸலாம்)
- இறுதி முத்திரை பெற்ற நபி
  – முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

சித்தீக் பாத்திமா றிபாஸா
4ம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா வளாகம்
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜ நாகம்



இராஜ நாகம் (King Cobra) என்பது தென் கிழக்கு ஆசியப் பகுதிகளில் வசிக்கும் ஒரு பாம்பு இனம் ஆகும். அதன் விஞ்ஞானப் பெயர் (Ophiophagus hannah) என்பதாகும். நச்சுப் பாம்புகளில் இதுவே உலகில் மிக நீளமானது. சுமார் 6.7 m (22அடி) வரை நீளமான இப்பாம்புகள் பொதுவாக அடர்ந்த காட்டுப் பகுதிகளிலேயே வாழும். இவை ஏனைய பாம்புகளையே பெரும்பாலும் உணவாகக் கொள்கின்றன. இதன் நஞ்சின் கடுமை ஒரே கடியிலேயே மனிதனைக் கொல்லவல்லது. இதன் கடியால் இறப்பு நேரிடும் வீதம் 75% வரை ஆகும்.

எம்.என்.ஆர். ஹாஜரா
பேருவளை

வினா விடை

1 ITN என்பது எந்நாட்டின் செய்தி நிறுவனம்? **இங்கிலாந்து**

2 புத்தரின் பல் ஒன்றை பாதுகாத்து வரும் தெற்காசிய நாடு எது? **இலங்கை**

3 புனித நாடு என்று அழைக்கப்படுவது எது? **பலஸ்தீன்**

4 ஜப்பானின் பழைய பெயர் என்ன? **நிப்போன்**

5 ஐசக் நியூட்டன் என்ற விஞ்ஞானியின் பிறப்பிடம் எது? **இங்கிலாந்து**

6 தங்கத்தின் பெறுமதி நிர்ணயிக்கப்படும் நகரம் எது? **லண்டன்**

7 இளம் வயதில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் யார்? **ஜோன். எப். கென்னடி**

8 உலகின் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தையின் பெயர் என்ன? **லூயி பிரவுன்**

9 கூடியளவு பிராண வாயுவைத் தரும் மரம் எது? **வேப்ப மரம்**

10 டைட்டானிக் கப்பல் மூழ்கிய கடல் எது? **அட்லாண்டிக்**



எம்.எம். இம்சாத்
தரம் 9
சிராஜ் அ.க, ஓட்டமாவடி

எங்கும் இப்படித்தான்

- வருவதும் போவதும் - இன்பம், துன்பம்
- வந்தால் போகாதது - புகழ், பழி
- போனால் வராதது - கற்பு, உயிர்
- தானாக வருவது - இளமை, முதுமை
- நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
- அடக்க முடியாதது - பசி, தாகம்
- பிரிக்க முடியாதது - பாசம், பந்தம்
- அழிவைத் தருவது - பொறாமை, கோபம்
- எல்லோருக்கும் சமனானது - இறப்பு, பிறப்பு

எம்.ஜே.எப். ஜெஸிரா, 4ம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்

பொன்மொழிகள்

- இருளைப் போக்குவது சூரிய ஒளி, ஆனால். மனிதனின் இருளைப் போக்குவது அறிவின் ஒளி,
- நல்லதை எண்ணுவதே அறிவு. எண்ணியதை முடிப்பதே முயற்சி,
- உலகிலே எதுவும் இல்லாதவனுக்குத்தான் எதையும் தாங்கும் இதயம் இருக்கும்,
- ஒரு மணி நேரத்தில் ஒரு நண்பனை இழந்து விடலாம், ஆனால். ஓர் ஆண்டு சென்றாலும் நல்ல நண்பனைப் பெற முடியாது,
- தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால் தீபம் வாழ்நாள் முழுவதும் சிரிக்கும்,

உலக தினம்

வினா விடை

1. உலக இளைஞர் தினம் ஜனவரி 4
2. சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8
3. உலக நோயாளர் தினம் பெப்ரவரி 17
4. சர்வதேச குடிநீர் தினம் மார்ச் 22
5. உலக சுகாதார தினம் ஏப்ரல் 7
6. உலக புத்தக தினம் ஏப்ரல் 12
7. உலக தாதியர் தினம் ஏப்ரல் 22
8. உலக தொழிலாளர் தினம் மே 1
9. உலக நூதனசாலை தினம் மே 18
10. உலக அன்னையர் தினம் மே 2வது ஞாயிறு
11. உலக தகவல்தொடர்பு தினம் மே 17
12. உலக கலாசார பண்பாட்டுத் தினம் மே 21
13. உலக புகையிலை எதிர்ப்பு தினம் மே 31
14. உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன் 5
15. உலக அகதிகள் தினம் ஜூன் 20

எம்.ரீ.எம். ஸபான்
சிராஜிரா அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

சிந்தனைத் துளிகள்

- பண்பும் பணிவும் நம்மை நல்லவர்களாக்கும்.
- அடக்கமும் ஒழுக்கமும் நம்மை சிறந்தவர்களாக்கும்.
- உண்மையும் உழைப்பும் நம்மை உயர்ந்தவர்களாக்கும்.
- ஆர்வமும் முயற்சியும் நம்மை வெற்றியாளர்களாக்கும்.
- திறமையும் அறிவும் நம்மை சாதனையாளர்களாக்கும்.
- அன்பும் கருணையும்தான் நம்மை மனிதர்களாக்கும்.

அமீர் முஹம்மத் சாஜித்
தரம் 10
பி/ அல் முர்சித் ம.வி.

தேனீக்களின் இரகசியம்

* தேனீ எறும்பு வகையைச் சேர்ந்தது.
* தேனீக்களால் புற ஊதாக் கதிர்களைக் காணமுடியும்.
* தேனீக்கள் நடனமாடித்தான் தகவல்களை பெற்றுக்கொள்கின்றன.
* தேனீக்களின் உடலில் 12 வரிகள் உள்ளன.
* தேனீக்கு காதுகள் கிடையாது.
* தேனீக்கள் 500g தேனைச் சேகரிக்க ஒரு தேனீக் கூட்டம் ஏறத்தாள 55,000 மைல்கள் பயணம் செய்யும்.

ராபி ரஸ்மி ஹஸன்
தரம் 4
மட்/ ஓட்டமாவடி ம.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன் கூறும் உயிரினங்கள்

எம்.வை.ஏ. ஜாரியா
பாத்திமா ஸஹ்றா மகளிர் அ.க.

பசுமாடு	: (2:67)	குதிரை	: (3:14)
குரங்கு	: (7:166)	நுளம்பு	: (2:26)
ஆடு	: (21:78)	பன்றி	: (5:60)
காகம்	: (5:31)	கழுதை	: (2:259)
சிலந்தி	: (29:41)	ஓ நாய்	: (12:14)
பேன்	: (7:133)	வெட்டுக்கிளி	: (54:7)
எறும்பு	: (27:18)	தவளை	: (7:133)
ஈ	: (22:73)	மீன்	: (37:142)
நாய்	: (7:176)	கறையான்	: (34:14)
தேனி	: (16:68)	ஒட்டகம்	: (91:13)
பாம்பு	: (27:10)		



ஹுத்ஹுத் (மரங் கொத்தி) : (27:20)
இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது 4 பறவைகள் : (2:360)
ஈஸா (அலஹிஸ்ஸலாம்) அவர்கள் உயிர்ப்பித்த பறவை : (5:110)

அறிந்து கொள்ளுங்கள்

- ✓ உலகிலேயே பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயியிசி அளிக்கும் நாடு- இஸ்ரேல்
- ✓ உலகில் கோப்பியை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு- பிரேசில்
- ✓ உலகிலேயே மிகப் பெரிய தனி இலையைக் கொண்ட தாவரம் எது- இராட்சத அல்லி
- ✓ அஞ்சல் துறையில் சிறப்பான நாடு- இந்தியா
- ✓ மனித உடலிலுள்ள விலா எலும்புகளின் எண்ணிக்கை- 24

எம்.எப்.எப். பஸ்ரா
தரம் 10
பேருவளை



வான்கோழி



வான்கோழியானது சீமைக்கோழி என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் பூர்வீகம் அமெரிக்காவாகும். அங்கிருந்து ஸ்பெயின் நாட்டு மாலுமிகள் மூலம் 16ஆம் நூற்றாண்டில் கனடா நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. இது ஐரோப்பிய நாடுகள் வழியாக உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. பொதுவாக வான்கோழி 23kg எடை கொண்டதாக இருக்கும்,

ஏ.எஸ்.எப். ஸமியா
அலிகார் ம.வி.
கள் எலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"How much do you know?"



Assalamu alaikum dear friends,

I wish you all Ramadan Mubarak ! May you achieve a fruitful Ramadan this time! Friends, during these blessed days , we would spend our time doing good activities that could please Allah SWT. Studying is also one very good activity that earns you merits from Allah .

So shall we go for some thing new this time? Let's try to get familiar with some vocabulary related to Ramadan.

BEFORE RAMADAN,

- We get ready to welcome the holy month
- We clean our homes, and complete the recitation of Quran, to begin it anew.
- We get prepared for all types of charity
- We forgive and forget the mistakes of others, and wait for Ramadan with a fresh mind

OK, NOW RAMADAN ARRIVES, ALHAMDULILLAH !

- WE THANK ALLAH FOR MAKING US REACH RAMADAN ONCE AGAIN
- MAKE PRAYERS LOOKING AT THE NEW CRESCENT
- FAST DURING DAY TIMES
- RECITE THE HOLY QURAN
- MAKE SUPPLICATIONS REGARDING ALL OUR NEEDS
- AVOID BACKBITING, LISTENING TO MUSIC, QUARRELLING, AND ALL SORTS OF EVIL.
- GIVE ZAKATH, THE OBLIGATORY CHARITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When Ramadan is about to leave

- We promise our selves to continue with all our good activities
- And welcome the wonderful day Eid-ul-Fitr!

Am I right friends ? .... Make changes to my list , according to what you have planned.



Plan , to get the MAXIMUM OUT OF THIS WONDERFUL MONTH!

Here is an Ifthar recipe, Come on, try it out, and help your mom !

Ingredients

2 cups cubed seeded watermelon
2 tablespoons fresh lime juice
1 cup ice cube
1 can diet lemon-lime soda, chilled

1. Place watermelon into freezer and freeze until firm
2. Put watermelon and lime juice in a blender and process until smooth.
3. With blender on, add ice cubes, 1 at a time; process until smooth.
4. Add soda whirl , a few seconds to blend.
5. Serve immediately

Courtesy : Food.com

Your corner

Common Abbreviation

1. A.C.C - Auxiliary Cadet Corps.
2. A.I.N.E.C - All-India News Paper Editors Conference.
3. B.B.C - British Broadcasting Corporation.
4. B.C.L - Bachelor of Civil Law.
5. C.B.I - Central Bureau of Investigation Or Intelligence.(U.S.A)
6. C.C.I - Cricket Council Of India.
7. D.C.L - Director of Civil Law.
8. U.N.O - United Nation's Organization.
9. U.N.I.S.E.F - United Nations International Children'S Emergency Fund.
10. S.S.L.C - Secondary School Leaving Certificate.



FATHIMA ROSHAN, GRADE-5
B.I.S
ATULUGAMA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Poverty

He heard a big noise......... (Continued from the last issue)

Immediately he turned back and was shocked. And he saw a tree had fallen on his house. He rushed inside to see his sisters, but couldn't find them. And then he heard a cry. He went running to that place and saw his younger sister buried under branches and bricks. And then he found his other two sisters , too were buried. Quickly he took all of them out. They were bleeding all over the body.

Ahmed couldn't do anything. They were in a critical condition. He wanted to take them the hospital. But he didn't have money. But he couldn't stay there seeing his sisters suffering. So he went asking for help. After two hours he came to see their condition. He was shocked to see them dead. He loved them a lot and he wanted to rescue them, but he couldn't do it because of poverty. He was helpless.

Now, our society is also not bothered about the poor. They neglect them as they are busy in their own work. Ahmed not only lost his sister, but also his happiness, love and family. There are many people, who suffer like Ahmed. So let's try to help them. At least by making dua.

Nuskiya Liyaudeen
Hapugastalawa
Ayesha Siddeqa Educational Institute

The importance of learning English

English is the most widely used language in the world. Nearly two third of the world population uses English language. In countries like England, the USA, Canada Australia and several parts of Africa , it's the mother tongue. In many commonwealth countries it is a second language.

"English can be regarded as the window to the world". This idea was expressed by the first prime minister of India, the late Jawaharlal Nehru

Today the world is highly advanced in science and technology, almost all the books on these subjects are written in English. If we know English , we can read and understand the facts given in these books.

At present, the whole world has become a global village through modern methods of communication such as Telex, fax, e-mail and Internet. English is the main language that is used in all these media.

As our economy is based mostly on import export trade, we have to deal constantly with other countries. English is essential for this purpose.

Therefore without the knowledge of English no one can pursue a specialized course of study. For those who seek foreign employment, too, English is indispensable.

Fasra Lizan, 11 G
Beruwala

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

அரபு மொழி

தொடர்:

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

முறைசாரா பன்மை جَمْعُ التَّكْسِيْرُ

அறபு மொழியில் ஒரு பெயர்ச்சொல் அதன் ஒருமைச் சொல்லின் தோற்றத்திலிருந்து மாறி வேறு தோற்றத்தில் அதன் பன்மை வரும்போது அப்பன்மைச்சொல் جَمْعُ التَّكْسِيْرُ ஜம்மு தக்ஸீர் என அழைக்கப்படும்.

ஒருமைச்சொல்லுடன் சில எழுத்துக்களை இணைப்பதன் மூலமோ அல்லது அச்சொல்லிருந்து சில எழுத்துக்களைலி குறைப்பதன் மூலமோ இந்தப்பன்மைச் சொல் பெறப்படும்.

இப்பன்மை வடிவங்கள் வரும் விதத்துக்கான சில உதாரணங்களை பட்டியல்படுத்தி நோக்குவோம்.

பன்மை வடிவங்கள்

1- فُعَّالٌ
2- فِعَالٌ
3- فُعُلٌ
4- أَفْعَالٌ
5- فِعْلَةٌ
6- فُعَلاَءُ
7- فُعُوْلٌ
8- أَفْعِلاَءُ
9- مَفَاعِيْلُ
10- مَفَاعِلُ
11- أَفْعِلَةٌ
12- أَفْعُلٌ
13- فُعْلاَنٌ

فُعَّالٌ

طَالِبٌ - طُلاَّبٌ	——	மாணவன்
تَاجِرٌ - تُجَّارٌ	——	வியாபாரி
حَاجٌّ - حُجَّاجٌ	——	ஹஜ் செய்தவர்
عَامِلٌ - عُمَّالٌ	——	வேலையாள்
رَاكِبٌ - رُكَّابٌ	——	பயணி

فِعَالٌ

رَجُلٌ - رِجَالٌ	——	மனிதன்
كَبِيْرٌ - كِبَارٌ	——	மூத்தவர்
صَغِيْرٌ - صِغَارٌ	——	இளையவர்
قَصِيْرٌ - قِصَارٌ	——	குட்டையானவர்
طَوِيْلٌ - طِوَالٌ	——	உயரமானவர்
ضَعِيْفٌ - ضِعَافٌ	——	பலவீனமானவன்
جَبَلٌ - جِبَالٌ	——	மலை
كَلْبٌ - كِلاَبٌ	——	நாய்
بَحْرٌ - بِحَارٌ	——	கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

فُعُلٌ

كِتَابٌ - كُتُبٌ	——	புத்தகம்
سَرِيْرٌ - سُرُرٌ	——	கட்டில்
رَسُوْلٌ - رُسُلٌ	——	தூதர்
مَدِيْنَةٌ - مُدُنٌ	——	நகரம்
سَفِيْنَةٌ - سُفُنٌ	——	கப்பல்
طَرِيْقٌ - طُرُقٌ	——	பாதை

أَفْعَالٌ

وَلَدٌ - أَوْلَادٌ	——	சிறுவன்
إِبْنٌ - أَبْنَاءُ	——	மகன்
عَمٌّ - أَعْمَامٌ	——	சாச்சா (தந்தையின் சகோதரன்)
قَلَمٌ - أَقْلَامٌ	——	பேனை
يَوْمٌ - أَيَّامٌ	——	தினம்
نَهْرٌ - أَنْهَارٌ	——	ஆறு
لَوْنٌ - أَلْوَانٌ	——	நிறம்
نُوْرٌ - أَنْوَارٌ	——	ஒளி

فِعْلَةٌ

فَتَىً - فِتْيَةٌ	——	இளைஞன்
أَخٌ - إِخْوَةٌ	——	சகோதரன்

فُعَلَاءُ

زَمِيْلٌ - زُمَلَاءُ	——	சகபாடி
فَقِيْرٌ - فُقَرَاءُ	——	ஏழை
عَالِمٌ - عُلَمَاءُ	——	அறிஞன்
وَزِيْرٌ - وُزَرَاءُ	——	அமைச்சர்
سَفِيْرٌ - سُفَرَاءُ	——	தூதுவர்

فُعُوْلٌ

شَيْخٌ - شُيُوْخٌ	——	கிழவன்
ضَيْفٌ - ضُيُوْفٌ	——	விருந்தாளி
حَقْلٌ - حُقُوْلٌ	——	வயல்
جَيْبٌ - جُيُوْبٌ	——	சட்டைப் பை
حَرْفٌ - حُرُوْفٌ	——	எழுத்து
قَصْرٌ - قُصُوْرٌ	——	கோட்டை
سَيْفٌ - سُيُوْفٌ	——	வாள்
مَلِكٌ - مُلُوْكٌ	——	அரசன்
بَيْتٌ - بُيُوْتٌ	——	வீடு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

أَفْعِلَاءُ

غَنِيٌّ - أَغْنِيَاءُ	——	செல்வந்தன்
صَدِيْقٌ - أَصْدِقَاءُ	——	நண்பன்
قَوِيٌّ - أَقْوِيَاءُ	——	பலசாலி
ذَكِيٌّ - أَذْكِيَاءُ	——	விவேகி

தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. இலங்கைக்கு பௌத்த சமயம் அறிமுகமாகிய ஆண்டு.

   i. கி.மு. 434 ii. கி.மு. 247
   iii. கி.பி. 434 iv. கி.மு 242

2. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்கு படுத்தினால் சரியாக அமையும் விடை.

	நிரல் 1	நிரல் 2
அ.	விஜயன் குழு	A கோகர்ண
ஆ.	மதுராபுரி இளவரசி	B ஜம்புகோளப் பட்டினம்
இ.	பத்தகச்சனா	C தம்பபண்ணி
ஈ.	மகிந்த தேரர்	D மாந்தை

   i. BCAD ii. BACD
   iii. DCAB iv. CDAB

3. இலங்கையின் ஐந்தாவது தலைநகரமாக அமைந்த நகரம்.

   i. குருணாகல் ii. யாப்பகூவ
   iii. தம்பதெனியா iv. கம்பளை

4. A 5ம் மகிந்தன் கைது செய்யப்பட்டமை.
   B வெள்ளரசுக்கிளை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமை.
   C 3ம் விஜயபாகு ஆட்சி செய்தமை.
   D செங்கோ தளபதி இலங்கை மீது படையெடுத்தமை.

   இவற்றுள் 2ம் பராக்கிரமபாகு காலத்தில் வாழ்ந்த ஒருவர் அறிந்திருக்க முடியாத ஒரு விடயம்.

   i. A ii. B
   iii. C iv. D

5. 6ம் பராக்கிரமபாகு மலையகத்தில் இடம் பெற்ற கிளர்ச்சியை அடக்குவதற்காக யார் தலைமையில் ஒரு படையை அனுப்பினான்?

   i. அம்புலக ii. சம்புமல்குமார
   iii. ஜோதிய iv. இராஜசிங்கன்

6. துட்டகைமுனுவால் அமைக்கப்படாத ஒரு கட்டடம்.

   i. மிரிசவெட்டி ii. தூபாராம
   iii. றுவன்வெலிசாய iv. ஜேதவனராம

7. பொலன்னறுவையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரியாத மன்னன்.

   i. 1ம் விஜயபாகு ii.1ம் பராக்கிரமபாகு
   iii. வசபன் iv. நிசங்க மல்லன்

8. செரண்டீப் என்று இலங்கையை அழைத்தவர்கள்.

   i. உரோமர் ii. கிரேக்கர்
   iii. அரேபியர் iv. சீனர்

9. அருகிலுள்ள கட்டடத்தின் பெயர்.



   i. சாஞ்சிதூபி ii. தெமல விகாரை
   iii. அபயகிரி விகாரை iv. கிரி விகாரை

10. இதை அமைத்த மன்னன்.

   i. அசோகன் ii. வசபன்
   iii. மகாசேனன் iv. தேவநம்பிய தீசன்

11. இவனுக்கு முன்பு ஆட்சி செய்தவன்.

   i. பண்டுகாபயன் ii. பிந்துசாரன்
   iii. பிம்பிசாரன் iv. தாதுசேனன்

12. பலாங்கொடை மனிதன் உணவாகக் கொள்ளாத ஒரு மிருகம்.

   i. பன்றி ii. அணில்
   iii. ஓணான் iv. குரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆரியர்களின் வேத நூல்களுள் ஒன்றாக அமையாதது.

i. இருக்கு ii. யசுர்
iii. பிசுர் iv. அதர்வணம்

14. கண்டி நகரின் பழைய பெயர்.

i. யட்டிநுவர ii. உடநுவர
iii. செங்கடகல iv. பாதுக்க

15. மெகஸ்தனிஸ் என்பவர் இந்தியாவில் எந்த நாட்டின் தூதுவராக விளங்கினார்?

i. கிரேக்கம் ii. உரோம்
iii. சீனா iv. பர்மா

16. பிந்துசாரனுக்குப் பின்பு இந்தியாவில் ஆட்சிக்கு வந்தவன்.

i. சந்திரகுப்தன் ii. அசோகன்
iii. பிம்பிசாரன் iv. சமுத்திரகுப்தன்

17. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை

	நிரல் 1	நிரல் 2
அ.	சத்திரியர்	A குப்பைகளை அகற்றுதல்
ஆ.	பிராமணர்	B விவசாயம் செய்தல்
இ.	சூத்திரர்	C வேதம் ஓதுதல்
ஈ.	வைசியர்	D ஆட்சி செய்தல்

i. BACD ii. DABC
iii. DBCA iv. DCAB

18. குப்தர் காலத்தில் பிரதேச அலகு எவ்வாறு அழைக்கப்பட்டது?

i. ஆயுக்த ii. புக்தி
iii. உருகுண iv. சபா

19. அனுராதபுரம் எந்த ஆற்றுக்கு அருகில் அமைந்திருந்தது?

i. கல் ஓயா ii. கலா ஓயா
iii. மகாவலி ஓயா iv. மல்வத்து ஓயா

20. உருகுணப் பகுதியின் தலைநகரமாக இருந்த நகரம்.

i. கதரகம ii. கோட்டை
iii. தீகவாபி iv. மாகம்

விடைகள்

1.	ii	11.	ii
2.	iv	12.	iii
3.	i	13.	iii
4.	iv	14.	iii
5.	i	15.	i
6.	ii	16.	ii
7.	iii	17.	iv
8.	iii	18.	ii
9.	i	19.	iv
10.	i	20.	iv

IIம் தாம்

1. i. சீனப் பிரதமர் புரட்சி பற்றி கூறிய கருத்தைத் தருக. 3 புள்ளிகள்)

ii. சீனப் புரட்சியின் 4 கட்டங்களையும் தருக. (4 புள்ளிகள்)

iii. மாவோசேதுங் சீனாவின் விடுதலைக்காக ஆற்றிய சேவைகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முதலாம் யுத்தத்தின் விளைவுகள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

1.

i. நாடுகளுக்கு சுதந்திரம் தேவை, இனங்களுக்கு விடுதலை தேவை, மக்களுக்கு புரட்சி தேவை.

ii. 1. யுவாங் ஷி காயியின் கூட்டாட்சிக் காலம் (1912 - 1916)

2. போர்த் தலைவர்களின் நிருவாகம் (1916 - 1922)

3. தேசியவாதப் புரட்சி (1923 - 1949)

4. காம்யூனிஸ புரட்சி (1949)

iii. **கம்யூனிஸ புரட்சியை மேற்கொண்டமை**

1949இல் சீனாவை ஒரு பொதுவுடமை நாடாக மாற்றிய பெருமை மாஓசேதுங்கைச் சாரும். உலகில் இரண்டாவது பொதுவுடமை நாடாக சீனா மாறுவதற்கு மாவோசேதுங்கின் கடுமையான உழைப்பே காரணமாகும். சியாங் - காய் - சேக்கிக் கோமிங்டாங் கட்சிக்கு எதிராக மக்களின் சக்தியை ஒன்று திரட்டிய மாவோசேதுங் 1949இல் தனது இலட்சியத்தை அடைந்தார். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொதுவுடமை உணர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டியதுடன், அவர்களுக்கு யுத்தப் பயிற்சியையும் வழங்கினார். மாவோசேதுங்கின் கம்யூனிஸ புரட்சி வெற்றி பெற்றதால், சியாங் - காய் - சேக்கிக் சீனாவிலிருந்து தப்பியோடி, தைவானில் அமெரிக்காவின் உதவியுடன் ஆட்சி புரிந்தார்.

நீண்ட நடைப் பயணம்

அமெரிக்காவின் கைப் பொம்மையாகச் செயற்பட்ட சியாங்காசேக், கொம்யூனிஸ்ட் கட்சிக்கு பல இன்னல்களை விளைவித்தார். தனது கட்சியின் பலத்தைக் காட்டுவதற்காக மாவோசேதுங் நீண்ட நடைப் பயணத்தை ஒழுங்கு செய்தார். 1934.10.16 இல் கியங்ஸி நகரில் இருந்து இப்பயணம் ஆரம்பித்து 1934.10.20இல் நிறைவு பெற்றது. பயண ஆரம்பத்தில் 90,000 பேர் கலந்து கொண்டனர். பலர் வழியில் இறந்துபோக முடிவில் 20,000 பேரே எஞ்சியிருந்தனர். 6000 மைல்களைக் கொண்ட இந்தப் பயணத்தினால் மாவோசேதுங்கின் புகழ் ஓங்கியது. கொம்யூனிஸ்ட் கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகரித்தது.

iv. அதிகமான உயிர்ச் சேதம் ஏற்பட்டது

இதற்கு முன்பு நடந்த எந்த யுத்ததையும் விடவும், முதலாம் உலக யுத்தத்தில் அதிகமான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. இந்த யுத்தத்தில் பயங்கர ஆயுதங்களும், விஷவாயுவும் பயன்படுத்தப்பட்டதனால் பல மரணங்கள் ஏற்பட்டன. ஜேர்மனி வீரர்கள் விஷவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் மூலம் எதிரிகளைத் தாக்கியதனால் பலர் மரணமடைந்தனர். இந்த யுத்தத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த 17,70 000 பேரும், ரஸ்யாவைச் சேர்ந்த 17,00 000 பேரும், பிரித்தானியாவைச் சேர்ந்த 13,60 000 பேரும் மரணமடைந்தனர். இதற்கு முன்பு உலகம் என்றுமே கண்டிராத மனிப் பேரவலம் முதலாம் உலக யுத்தத்தில் ஏற்பட்டது.

சர்வதேச சங்கம் உருவாகியமை

முதலாம் உலக யுத்தம் பல மோசமான அழிவுகளை ஏற்படுத்தியது. இவ்வாறான அழிவுகள் இனிமேல் உலகில் நடைபெறக் கூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே சர்வதேச சங்கம் ஆகும். இதை ஏற்படுத்த உழைத்தவர் அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் ஆவார். நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிணக்குகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்தல், உலகில் சமாதானத்தை ஏற்படுத்தல் என்பன இந்த அமைப்பின் முக்கிய நோங்களாகும். சர்வதேச சங்கம் உலகில் தோன்றிய பல பிரச்சினைகளை நீக்கியது. 1921இல் ஜேர்மனிக்கும் போலாந்துக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குகளை இது தீர்த்து வைத்தது. மொசூல் எண்ணெய் வயல் தொடர்பாக ஈராக்கிற்கும் துருக்கிற்கும் ஏற்பட்ட முரண்பாட்டையும் சர்வதேச சங்கம் தீர்த்து வைத்தது.

ஸீரா... (05ஆம் பக்கத் தொடர்...)

நபியவர்கள் திடீரென காலிதின் குதிரை வீரர்களால் சூழப்பட்டார்கள். இப்போது நபியவர்களுக்கு முன் இரு வழிகள்தான் இருந்தன. ஒன்று, உடனடியாக தங்களையும் தங்களுடைய ஒன்பது தோழர்களையும் பாதுகாத்துக் கொண்டு ஒரு ஆபத்தில்லாத இடத்தில் ஒதுங்கி விடுவது. மேலும், எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட தங்களது படையை அதற்கு விதிக்கப்பட்ட விதியை அது சந்திக்கட்டும் என்று விட்டு விடுவது. இரண்டாவது, தனக்கேற்படும் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் தனது தோழர்களைத் தன்னை நோக்கி வருமாறு அழைப்பது. அவ்வாறு ஒன்றுசேரும் அந்த தோழர்களைக் கொண்டே எதிரிகளால் சூழப்பட்ட தனது படையைக் காப்பாற்றி உஹத் மலைக் குன்றுகளின் உச்சிக்கு அழைத்து செல்ல முயற்சி செய்வது.

இந்நேரத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நிகரற்ற வீரம் வெளிப்பட்டது. தனது சப்தத்தை உயர்த்தி தனது தோழர்களை, “அல்லாஹ்வின் அடியார்களே! என் பக்கம் வாருங்கள்” என்று அழைத்தார்கள். தனது குரல் ஒலியை முஸ்லிம்களை விட எதிரிகள்தான் முதலில் கேட்பார்கள். அவ்வாறு கேட்டால், தான் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகுவோம் என்றிருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் தன் தோழர்களை அழைத்தார்கள். எதிரிகள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இருப்பிடத்தை அறிந்து கொண்டு, முஸ்லிம்கள் நபியவர்களிடம் வந்து சேர்வதற்கு முன்பாக அவர்கள் வந்து சேர்ந்தனர். அவ்விடத்தில் நபியவர்களைப் பாதுகாக்க 07 பேர் மாத்திரமே இருந்தனர். அவர்கள் அனைவரும் இறுதிவரை போராடினர். அந்தப் போராட்டம் முஸ்லிம்களுக்கு வெற்றியளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்தான் 'Number One'

✍ ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

படிக்க வேண்டும் பரீட்சையில் பாஸ் பண்ண வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் இருக்கும். ஆனால், பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்து நான்தான் முதலாவதாக வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் சிலர்தான். அந்த எண்ணம் கொண்டவர்கள்தான் சாதிக்கிறார்கள். பரீட்சையில் சித்தியடைவதே பெரும்பாடு என வருந்திக் கொள்பவர்கள் தோற்றுப் போகிறார்கள்.

பரீட்சையில் மாத்திரமல்ல, முழு வாழ்க்கையிலுமே அப்படித்தான். தான் முதலில் வர வேண்டும் என்று எண்ணுபவர்களே வெற்றி பெறுகின்றனர். அது ஓர் உயர்ந்த இலக்கு. ஒருவருக்கு மாத்திரமே கிடைக்கும்.

அந்த ஒருவர் நீங்களாக இருந்தால்...?

சரி, அப்படி உங்களுக்கு முதலாவதாக வரும் ஆசை இருந்தால் அதனை அடைவது எப்படி என்று பார்ப்போம்.

முதல் நாளே Number One

பொதுவாக வியாபாரம் ஆரம்பித்து அது படிப்படியாக வளர்ந்து குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மற்றைய போட்டிக் கம்பனிகளுடன் போட்டியிட்டு தாம் முதலாவது இடத்தைப் பெற முயல்வர். ஆனால், இந்த பொதுவான விதியைத் தாண்டி 'தைனிக் பாஸ்கர்' என்ற பத்திரிகை நிறுவனம் முதல் நாளே Number One என்ற நிலையை தனது இலக்காக நிர்ணயித்து அதனை அடைந்தது. அது வேறு எங்கும் அல்ல, எமது அயல் நாடான இந்தியாவில்தான். அதுவும் அங்கு ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழிகளில் பத்திரிகை வெளிவந்தால் குறிப்பிட்ட அளவைவிட முன்னேற முடியாது என்ற பிரம்மையில் அனைத்து பத்திரிகை நிறுவனங்களும் மூழ்கியிருந்தபோது அதனையும் தகர்த்தெறிந்து அந்தந்த ஊர் மொழியிலே பத்திரிகை வெளியிட்டு முதல் நாளிலேயே Number One என்ற இலக்கை அடைந்தது சாதனைதான்.

இதனை அடைவதற்கு அவர்கள் வகுத்த வியூகம் அருமையானது. தனது வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவராகச் சென்று அவர்களது தேவை, எதிர்பார்ப்பு, இயல்பு என்பவற்றை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்யும் வகையில் வழங்கினர். எமது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கின்ற பத்திரிகை என வாசகர்கள் வாங்கி மகிழ்ந்தனர். தைனிக் பாஸ்கர் Number One ஆனது.

உலகில் Number One

பில் கேட்ஸ், கணினிகளுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தனது திட்டத்தைத் தொடங்கியபோது அவரது கனவு உலகில் Number One ஆக வர வேண்டும் என்பது தான். ஆனால், பாடசாலையில் எமது வகுப்புகளிலேயே Number One ஆக வர வேண்டும் என்ற கனவின்றி நாம் தூங்குகிறோம். தனிநபர்கள் முதல் நிறுவனங்கள் வரை Number One ஆக வர வேண்டும் என கடுமையாக உழைக்கின்றன.

அப்போது சோவியத் யூனியனிற்கும் (இன்றைய ரஷ்யா) அமெரிக்காவுக்கும் இடையில் பனிப்போர் நடந்து கொண்டிருந்த காலம். அப்போதைய அமெரிக்க அதிபர் ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அப்போது நட்புக்காக அமெரிக்க அதிபருக்கும் ரஷ்ய அதிபருக்கும் இடையில் கார்ப் பந்தயம் ஒன்று இடம்பெற்றது. அதில் அமெரிக்க அதிபர் வென்று விட்டார். மறுநாள் ரஷ்யப் பத்திரிகையில் இது தொடர்பான செய்தி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று நடைபெற்ற கார் பந்தயப் போட்டியில் எமது அதிபர் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால், எவ்வளவு முயன்றும் அமெரிக்க அதிபரால் கடைசிக்கு முந்தைய இடத்தையே பெற முடியுமாக இருந்தது.

பெரும் நிறுவனங்கள் மாத்திரமல்ல, நாடுகள்கூட தமது முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே குறியாய் இருக்கின்றன. முதல் இடத்தைத் தவற விடுவதை அவர்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. துரதிஷ்டம், நாம் முதல் இடத்தை நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை.

சரி, இப்பொழுது Number One என்ற இலக்கை அடைவது என்று உறுதி பூண்டிருப்போம். அதனை அடைவது எப்படி என்பதைப் பார்ப்போம்.

Number One ஆக வருவதற்கான வியூகம்

பொதுவாக ஓர் இலக்கை அடைவதற்கு நாம் வியூகங்கள் வகுத்திருப்போம். ஆனால், அந்த வியூகங்களிலிருந்து வேறுபட்டு முதலிடத்தைப் பெற வேண்டுமென்றால் அதற்கான வியூகம் வித்தியாசமாக அமைய வேண்டும். முதலிடத்தைப் பெறுவதை நோக்கியே அந்த வியூகம் வரையப்பட வேண்டும்.

இதற்கு முதலில் முதலிடத்தைப் பெறுவதற்கான வழிவகைகள் ஆராயப்பட வேண்டும். என்ன செய்தால் முதல் இடத்தைப் பெறலாம், முதல் இடத்தைப் பெறுவதற்கு எவை தடையாக உள்ளன, ஏனையவர்களை முந்திக் கொண்டு நாம் எப்படி முதலிடத்தைப் பெறுவது என பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எமது வியூகம் வரையப்பட வேண்டும்.

நம்பர் வண் ஆக வருவதற்கான பயிற்சி, முயற்சி

ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெறுபவர் திடீர் என்று வந்தார், ஓடினார், முதலாவது வந்தார் என்று யாராவது சொன்னால் என்ன சொல்வீர்கள்? ஏனெனில் அந்த 100 மீற்றரை அனைவரையும்விட விரைவாகக் கடந்து முதலிடத்தைப் பெறுவதற்கு அவர் ஏனையவர்களை விட சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். அதற்காக அவர் கடுமையான முயற்சி செய்துள்ளார். அதுபோலத்தான் நாமும் முதலிடத்தைப் பெற சிறப்புப் பயிற்சி தேவை. கற்பதிலும் சரி, மற்றைய விடயங்களிலும் சரி அனைத்திலும் அப்படித்தான்.

பல மணித்தியால உழைப்பு

முன்னுக்கு வருவதென்றால் பல மணித்தியால உழைப்பு தேவைப்படும். வழமையாக எமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் ஓரிரண்டு மணித்தியாலங்கள் பணியாற்றி விட்டு Number One ஆக வரக் கனவு கண்டால் அது பகற்கனவாகவே இருக்கும். ஏனெனில் முதலாவது வர வேண்டும் என நாம் நினைக்கும்போது அது எம்மையறியாமலேயே பல மணித்தியாலங்கள் எம்மை இயக்கும். தூக்கம் மறந்து எம்மைப் பணியாற்ற வைக்கும். சோம்பேறித்தனம் களைந்து எம்மை செயற்படத் தூண்டும்.

அனைத்திலும் முதலிடம்

முதலாவது வர வேண்டும் என நாம் நினைத்தால் எமது செயற்பாடுகள் அனைத்திலும் சிறந்து விளங்க வேண்டும். அப்போதுதான் எம்மால் முதல் இடம் என்ற இலக்கை அடைய முடியும். நாம் அலட்சியமாயிருக்கின்ற அல்லது தவற விடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் எமது இலக்கை பின்னடையச்செய்து விடும். கொகா கோலா கம்பனி தான் முதலிடத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக எடுக்கின்ற பிரயத்தனங்கள் ஏராளம், ஏராளம்.

பொதுவாக கொகா கோலா என்றால் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால், தொலைக்காட்சியில் வானொலியில் வீதிகளில் என காணும் இடமெல்லாம் கொகா கோலா மயமாக இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? ஒருவருக்குத் தாகம் வந்தால் அவருக்கு நினைவு வர வேண்டியது தண்ணீர் அல்ல, கொகா கோலா என்பதுதான் அவர்களின் தாரக மந்திரம். உலகில் முதல் இடத்தைப் பெற வேண்டுமானால் அனைவர் மனதிலும் முதல் இடத்தை மாத்திரமல்ல, அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வர வேண்டியதும் கொகா கோலாதான் என அவர்கள் நினைப்பதால்தான் முதலிடம் என்பது அவர்களுக்கு சாத்தியமானது.

விஞ்ஞான தொழிநுட்பக் கண்டு பிடிப்புகளுக்கு ஒரு விதி இருக்கிறது. அதாவது உலகில் கண்டு பிடிப்புகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். மார்க்கோனி வானொலியைக் கண்டு பிடிக்காவிட்டால் வேறு யாராவது கண்டு பிடித்திருப்பார்கள். அதேபோலத்தான் தொலைக்காட்சி, கணினி... இப்படி அனைத்தும் அப்படித்தான். வரலாறு முழுக்க நினைவு படுத்தப்படுவது அந்த முதலாவது கண்டுபிடித்தவரைத்தான். முதலிடத்திற்குத்தான் எப்போதுமே வரவேற்பு, மரியாதை எல்லாமே!

சரி, இரண்டாம் தவணை முடிவடைந்து விட்டது. மூன்றாம் தவணை நீங்கள் முதலாமவரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான கட்டம். இப்போது தயாராகுங்கள். நீங்கள்தான் நம்பர் வண். வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“பாடங்களை மீட்டுவதற்காக உட்கார்ந்தால் கடுமையான மனச்சோர்வை உணர்கிறேன்”

ஹனீபா ஏ.வஹாப் (இஸ்லாஹி)

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்

பாடங்களை மீட்டவும் படித்த பாடங்களை ஞாபகத்தில் பதிய வைப்பதற்கும் ஆசைப்படுகிறேன்; அதற்காக தினமும் முயற்சிக்கிறேன். எனினும் பாடங்களை மீட்டுவதற்காக உட்கார்ந்தால் கடுமையான மனச்சோர்வை உணர்கிறேன். காரணம் என்ன என்பதை என்னால் இனங்காண முடியவில்லை. அதேசமயம் பாடங்கள் மீட்டுவதை விட்டும் தூரமானால் என்னுடைய தாய் என் மீது கடுமையாகக் கோபப்படுகிறார். இம்முறை நான் சாதாரண தரப் பரீட்சை எழுத இருப்பதே அவர் கோபப்படுவதற்கான காரணம். இதிலிருந்தும் நான் எவ்வாறு விடுபடுவது என்பது எனக்குத் தெரியவில்லை. மேலும், நான் அறிந்த வகையில் என்னுடைய விஞ்ஞானப் பாட ஆசிரியையினால் கடுமையான அழுத்தத்துக்குட்படுகிறேன். ஏனெனில், அவர் எப்போதும் என்னுடன் எரிந்து விழுகிறார். இதற்குரிய காரணமும் என்னவென்று புரியவில்லை. அவருடைய நடவடிக்கைகள்கூட எனக்கு தீங்கு விளைவிப்பதாகவே உணர்றேன். இவற்றையெல்லாம் நினைக்கும்போது என்னால் எதுவுமே செய்ய முடியாமல் இருக்கிறது. உங்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன்.

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ

முதலில் நீங்கள் பிரச்சினையாகக் கருதுகின்ற விடயங்களை விட்டும் விடுதலை பெற அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன். சகோதரர்! உங்களுடைய பிரச்சினை இன்ஷா அல்லாஹ் எளிமையானது. பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பாட்டிற்கு கொண்டுவர முயற்சிப்பீர்களானால் உங்களுடைய பிரச்சினையை இலகுவாகக் களைந்து கொள்ளலாம் என நம்புகிறேன்.

முதலாவதாக, கல்வி மற்றும் அறிவின் முக்கியத்துவம் பற்றி உறுதியான, பூரணமான ஓர் உணர்வை உங்களுடைய உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு மனிதன் குறிப்பிட்ட ஒரு விடயத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டால் அவன் அவ்விடயத்தில் அதிக கரிசனை செலுத்தக் கூடியவனாக மாறி விடுகின்றான். அவ்வாறு அதன் முக்கியத்துவத்தை அறியாமல் இருந்தால் அவ்விடயத்தில் அவ்வளவு கரிசனை காட்டமாட்டான்.

> மீட்டலுக்கு மிகச் சிறந்த நேரம் தஹஜ்ஜுத் மற்றும் ஸுப்ஹுத் தொழுகைக்குப் பின்னால் உள்ள நேரமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அந்த நேரத்தில் மூளையில் எவ்வித கெடுபிடிகளுமின்றி சுதந்திரமாகவும் ஆறுதலாகவும் அமைதியாகவும் ஒரு மனிதன் விழித்திருக்கிறான்.

இந்த நிமிடம் முதல் இன்னும் ஆறு அல்லது ஏழு வருடங்களுக்குப் பிறகு நீங்கள் எங்கே இருப்பீர்கள்? உங்களுடைய தகைமைகள் என்னவாக இருக்கும்? கல்வித் தரம், சமூக அந்தஸ்து போன்றன என்னவாக இருக்கும்? மார்க்க அறிவை எந்தளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருப்பீர்கள்? திருமண வாழ்க்கையில் எந்த இடத்தை அடைந்திருப்பீர்கள்? என்பவற்றை உள்ளத்தில் உருவகித்துக் கொள்ளுங்கள்.

இவ்வினாக்கள் அனைத்தையும் உங்கள் உள்ளத்தில் தொடுத்துப் பாருங்கள். இதுதான் உங்களை கல்வியின் அவசியம் தொடர்பான சிந்தனையின்பால் உள்ளார்ந்த ரீதியாக தூண்டக்கூடிய அம்சமாகும். இந்த உலகத்திலிருக்கின்ற அனைத்து விடயங்களும் நீங்கி விடக் கூடியதே, ஒரு மனிதன் தன்னுடைய கல்வி மற்றும் மார்க்கத்தைத் தவிர மற்ற அனைத்தையும் இழந்து விடுவான். அம்மனிதனிடமிருந்து அவை இரண்டையும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் பிரிக்கவோ, அழிக்கவோ சக்தி பெற்றவர்கள் அல்லர். செல்வம், வாகனங்கள், உயர் கட்டடங்கள் போன்றன பிறரால் சூறையாடப்படக் கூடியனவே. அவற்றுக்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனாலும் அறிவும் மார்க்கமும் உங்களுடைய ஒரு பகுதியாகும். அவற்றை உங்களிடமிருந்து பிரிக்க யாராலும் இயலாது.

1990 களில் முஸ்லிம்கள் தமது எல்லா சொத்துக்களையும் இழந்தார்கள். ஆனால், அறிவு, மார்க்கம் என்பவற்றை இழக்கவில்லை. அதன் மூலம் முன்னேறினார்கள். 2004 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையின் பெரும்பாலான பகுதியை சுனாமி காவு கொண்டது. அப்போதும் அங்கு வாழ்ந்த மக்கள் தமது உயிர்களையும் உடமைகளையும் இழந்தனர். ஆனால், தாம் பெற்ற கல்வி, தாம் பற்றிக்கொண்ட மார்க்கம் இவற்றை இழக்கவில்லை என்ற அம்சங்கள் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

கல்வி மற்றும் மார்க்கம் என்பன ஒளி என்பதை கற்றுக் கொள்வதும் அறிந்து கொள்வதும் அவசியமாகும். அது மனிதனை அழகுபடுத்துகிறது. அவனுடைய உள்ளத்தையும் வெளித் தோற்றத்தையும் அவனுடைய இருப்பையும் அவனுக்குள்ளும் அடுத்தவர்களுக்கு முன்னாலும் அழகுபடுத்துகிறது. இவற்றை உணர்ந்து கொண்டால் அதற்குப் பின்னால் உள்ள அம்சங்கள் அனைத்தும் மிகவும் இலேசானதாக அமைந்து விடும். இந்தியாவின் 11 ஆவது குடியரசு ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் அவர்கள், "இளைஞர்களே கனவு காணுங்கள்! கனவு என்பது தூக்கத்தில் வருவதன்று. மாறாக அது உங்களைத் தூங்க விடாதது" என்று இளைஞர்களைப் பார்த்துக் கூறுகிறார். எனவே, கல்வியில் முன்னேற்றமடைவதை உங்களுடைய தீராத கனவாக ஆக்கிக் கொள்ளுங்கள்! நிச்சயம் அது உங்களை எப்போதும் சுறுசுறுப்பாக இயக்கிக் கொண்டிருக்கும் வல்லமை கொண்டது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டதன் பிறகு பின்வரும் படிமுறைகளை பின்பற்ற முயற்சியுங்கள்:

1. உங்களுடைய விடயங்களை இலகுபடுத்தித் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்.

2. உங்களுடைய நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். மீட்டலுக்கு மிகச் சிறந்த நேரம் தஹஜ்ஜுத் மற்றும் ஸுப்ஹுத் தொழுகைக்குப் பின்னால் உள்ள நேரமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அந்த நேரத்தில் மூளையில் எவ்வித கெடுபிடிகளுமின்றி சுதந்திரமாகவும் ஆறுதலாகவும் அமைதியாகவும் ஒரு மனிதன் விழித்திருக்கிறான். அந்நேரத்தில் கிரகிக்கும் ஆற்றல் மட்டம் மகத்தானதாகக் காணப்படும். வெறுமையான உள்ளத்துடன் பாடங்களை மீட்டும்போது நிச்சயமாக அது உள்ளத்தில் பதியும் வீதம் அதிகரிக்கும். பின்னர் பாடசாலைக்குச் செல்லுங்கள். நீங்கள் சுறுசுறுப்பாக இருப்பதுடன் பாடங்களையும் நன்றாக உள்வாங்கிக் கொள்ளுங்கள்.

3. உங்களுக்கும் உங்களுடைய விஞ்ஞானப் பாட ஆசிரியைக்குமிடையிலுள்ள உறவு உங்களை அழுத்தத்துக்குள்ளாக்குவதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவருடைய செயல் உங்களை நோவினை செய்வதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆசிரியர்கள் என்போர் தாய், தந்தைக்கு ஒப்பானவர்கள். சமூக முன்னேற்றத்துக்காக உழைப்பதைத் தமது தலையாயக் கடமையாகக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் எப்போதும் சத்தியத்தில் நிலைத்திருப்பர். ஆனால், மாணவர்கள் சில நேரம் சத்தியத்தை விட்டும் விலகி தவறிழைக்க வாய்ப்பிருக்கிறது. இருப்பினும் மனிதன் என்ற வகையில் சிலநேரம் ஆசிரியரும் தவறிழைக்கலாம். இவ்வாறான முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் பெரும்பாலும் இட்டுச் செல்லும் விடயம் புரிதல்களில் ஏற்படும் தவறுகளே (Misunderstanding). இங்கு உங்களைப் பற்றி ஆசிரியையோ அல்லது அசிரியையைப் பற்றி நீங்களோ தவறாகப் புரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரச்சினையிலிருந்து விடுபட முதலில் உங்களுடைய ஆசிரியையுடன் மனந்திறந்து கலந்துரையாடுங்கள். உங்களுடைய ஆசிரியை அவ்வாறு நடந்து கொள்வதற்குத் தூண்டும் உங்களுடைய நடவடிக்கைகள் என்ன என்பதை வினவுங்கள் அல்லது அறிந்து கொள்ளுங்கள். உண்மையில் தவறு உங்கள் பக்கம் காணப்படுமாயின் அதை ஒப்புக் கொண்டு அதற்காக மன்னிப்புக் கோருங்கள். அவ்வாறில்லை எனில் அவருடைய செயற்பாடு தங்களுடைய கல்விக்குத் தடையாக அமைகின்ற விதத்தைப் பற்றி எடுத்துக் கூறுங்கள். இன்று எந்தவொரு முரண்பாட்டையும் இலகுவாகத் தீர்க்கும் ஊடகமாக கலந்துரையாடல் காணப்படுகின்றது என்பதை மறந்து விடாதீர்கள்.

இம்முயற்சி வெற்றியளிக்கவில்லை எனில், உங்களுடைய பிரச்சினையைப் பற்றி உங்கள் பாடசாலையிலுள்ள கல்வி வழிகாட்டல் ஆலோசகரிடம் தெரியப்படுத்துங்கள். நிச்சயம் அவர் உங்களுக்கு உதவி செய்வார், இன்ஷா அல்லாஹ். அதுவும் வெற்றியளிக்கவில்லை என்றால், உங்களுடைய பெற்றோருடன் கலந்துரையாடி அதிபர் மற்றும் குறிப்பிட்ட ஆசிரியை ஆகியோரைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்.

எந்த சந்தர்ப்பத்திலும் உங்களுடைய செயற்பாடுகள் ஆசிரியையைப் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் உதவி உங்களுக்குக் நிச்சயம் கிடைக்கும், இன்ஷா அல்லாஹ்.

4. உங்களுக்கு நம்பகமான, கற்றலுக்குத் துணை செய்யக்கூடிய உங்கள் வகுப்புத் தோழமைகளுடன் இணைந்து குழுவாகப் படிக்க முயற்சி செய்து பாருங்கள். நிச்சயமாக இது பலனளிக்கும்.

5. நேரத்தை ஒழுங்குபடுத்தி நேரசூசி ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள். இதன் அர்த்தம் இடைவிடாது தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதல்ல. உங்களுடைய நேரசூசியில் படிப்பதற்கு, ஓய்வெடுப்பதற்கு, வணக்கங்களை நிறைவேற்றுவதற்கு என்று நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்.

6. நீங்கள் தொடர் நாடகங்கள் பார்ப்பவராக இருந்தல் மெதுவாக அதை விட்டும் ஒதுங்கிக் கொள்வது உங்களுடைய மீட்டலுக்கு உதவியாக அமையும்.

7. உங்களுடைய படிக்கும் அறையை நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் அழகாகவும் வைத்திருக்காவிட்டாலும் மீட்டல் சிரமமாக அமைய வாய்ப்பிருக்கிறது. எனவே, அறையை நன்றாக வைத்திருங்கள். உங்களுடைய அறை காற்றோட்டம் உள்ளதாகவும் போதிய வெளிச்சமுள்ளதாகவும் உள்ளதா என்பதை ஒரு தடவை பார்த்துக் கொள்ளுங்கள்.

8. உங்களுடைய தாயைப் பொறுத்த வரையில் உங்களுடைய எதிர்காலம் சிறந்ததாக அமைய வேண்டும் என அதிகமாக ஆசைப்படுகிறார் என நம்ப முடிகிறது. எப்போதும் பெற்றோர் தம்மை விட தமது பிள்ளைகள் சிறந்தவர்களாக வரவேண்டும் என நினைக்கின்றனர். உண்மையில் நீங்கள் உங்களுடைய தாய்க்கு நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் நேரசூசி ஒன்றை ஒழுங்கு செய்து அதை உம்முடைய தாயிடம் காட்டிக் கலந்துரையாடுங்கள். அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த உதவி செய்யுமாறு கேளுங்கள். நிச்சயமாக அவர் உங்களுக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குவார் என்பதில் சந்தேகமில்லை.

9. எவ்வளவுதான் திட்டமிட்டாலும் அதன் வெற்றிக்கும் தோல்விக்கும் துணை செய்வது அல்லாஹ்தான் என்ற வகையில் பாடங்களை மீட்ட முன்பும், மீட்டிய பின்பும் இரண்டு ரக்அத்கள் தொழுது முடியுமானவரை அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

உங்களுடைய கல்வி வாழ்க்கை மற்றும் ஏனைய வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொது நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

பகுதி iii

மங்கையர்க்கரசியின் காதல்

⇨ மங்கையர்க்கரசியின் காதல் என்பது

- ஒரு சிறுகதை

⇨ இக்கதையின் படைப்பாளர்

- வ.வே.சு. ஐயர்

⇨ வ.வே.சு. ஐயர் என்பதன் முழுப்பெயர் வடிவம்

- வரகனேரி வேங்கடேச சுப்ரமணிய ஐயர்

⇨ இவரது சிறப்பு யாது?

- தமிழ் சிறுகதை இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர்.
- தலை சிறந்த எழுத்தாளர்.
- சூசிகை எனும் முறையை சிறுகதை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்.
- காதலுக்குத் தடைபோடும் இயல்பு மிகைத்திருந்த கால கட்டத்தில் துணிவுடன் இக்கதையை படைத்தமை.

⇨ இக்கதை எழுதப்பட்ட காலப் பின்னணி எத்தகையது?

- ஆணாதிக்கம் கொடிகட்டிப் பறந்த காலம்.
- காதல் பெண்ணுக்குக் கேடு என தடை விதித்த காலம்.
- படிப்பின் வாசம் நுகர பெண் தடை விதிக்கப்பட்டாள்.
- ஆசைப்பட்டவனை கைப்பிடிக்க முடியாத நிலை
- பாரதியின் புதுமைப் பெண்ணாக தடையைத் தகர்த்திட மனதுக்குள்ளேயே பெண்கள் போராடிக் கொண்டிருந்த காலம்.
- 20ம் நூற்றாண்டின் முற்பகுதி.

⇨ சூசிகை என்றால் என்ன?

- கதைக்கான அறிமுகம், கதையின் முன் நிகழ்வு பற்றிய விளக்கம்.

⇨ சூசிகையின் முக்கியத்துவம்?

- பின்னே நிகழப்போகும் விடயங்களை அறியும் ஆவலைத் தூண்டுவதாகவும், பாத்திரங்கள் பற்றிய அறிமுகமாகவும், கதையை சுவைப்பட சம்பவங்களை மனதில் கொண்டு வாசிக்கும் வழிவகையாகவும் இருக்கும்.

⇨ மங்கையர்க்கரசியின் சிறுகதையின் 'கதைக் கரு', 'களம்' என்பவற்றை விளக்குக.

- கரு:

கால சூழ்நிலையினைப் புலப்படுத்தி, நிறை வேறாத பெண்களின் காதலையும் காதலுக்கு எதிர்மறை நாயகர்கள் எப்போதும் இருப்பார்கள் என்பதையும் புலப்படுத்துவதோடு, புதிய திருப்பமாக தன் காதலனைக் கொண்டவனை பழிக்குப் பழி வாங்கிய பின்னரே தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் வீரப் பெண் பாத்திரமாக மங்கையர்க்கரசியை காட்சிப்படுத்துதலை கதைக் கருவாகக் கூறலாம்.

களம்:

காளிக்கோயில் இக்கதையில் முக்கிய கதைக் களமாக இருப்பதை அறிகிறோம். கருணாகரனின் வரவுக்குக் காத்திருந்த மங்கையக்கரசி மாலையிட வந்தவனை கொண்ட மார்த்தாண்டனின் உயிரை பத்திரக்காளியாக மாறி பழி தீர்த்தமை இக்களம் மூலமாகவே ஆசிரியர் கூறிச் செல்கிறார்.

⇨ இக்கதையின் முக்கிய பாத்திரங்கள் யாவை?

- மங்கையர்க்கரசி, மார்த்தாண்டன்

⇨ வ.வே.சு. ஐயரின் வேறு சிறுகதைகள் 4 தருக.

1. குளத்தங்கரை அரச மரம்
2. கமல விஜயம்
3. காங்கேயன்
4. லைலா மஜ்னு

⇨ சிறுகதைகள் தவிர வேறு படைப்புக்கள் 2 கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திருக்குறள் (ஆங்கில மொழிபெயர்ப்பு)

2. சந்திர குப்த சக்கரவர்த்தி சரித்திரம்

⇨ ''மங்கையர்க்கரசியின் காதலை ஆசிரியர் சிறப்பாக புலப்படுத்தி இருக்கிறார்" - விளக்குக

▸ வ.வே.சு. ஐயரின் சிறந்த படைப்புகளில் இதுவும் ஒன்று. இக்கதையின் ஆரம்பம் முதல் முடிவு வரை மங்கையர்க்கரசியின் மனதில் அரும்பிய காதல் மணம் வீசுவதைக் காணலாம்.

அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு என்று முழங்கும் காலச் சூழ்நிலையில் பெண்ணின் உணர்வுக்கு அணி சேர்க்கும் இலக்கியமாகத் திகழ்வது அவளது காதலின் மகிமை பேசப்படுவதாலாகும். கருணாகரனை தலைவனாக மனதுக்குள் கோயில் கட்டி கணவனாக பூஜித்தாள். அவன் வரவுக்காக காளிக் கோயிலில் காத்திருக்கும்போது தெய்வத்திடம் அவள் கூறும் விடயங்கள் இதை எடுத்துக் காட்டுகிறது.

மேலும், மார்த்தாண்டன் காதல் பிச்சை கேட்கிறான். சிற்றப்பன் மார்த்தாண்டனை மணக்கும்படி சதி செய்கிறார். மங்கையர்க்கரசியோ 'சிங்கத்தை பார்த்த கண்ணால் செந்நாயை பார்ப்பேனா?' என தன் மனங் கொண்ட மன்னவனை உயர்வாக எண்ணி காதலில் உறுதியாக நிற்கிறாள். கருணாகரனை கொன்றுவிட்டதாக மார்த்தாண்டன் கூறும்போது துவண்டுவிடாது கொன்ற இடத்தைக் காட்டும்படி துணிவுடன் கூறுகிறாள்.

காதலனின் உயிரற்ற உடலைக் கண்டவுடன் துடிதுடிக்கின்றாள். தூய காதலின் துயரம் தொடர்கிறது. கண்ணில் கண்ணீர் மழையானாலும் பிணமாக்கப்பட்டவனை பிணமாக்கியவனுடன் வந்து நேரில் காண அவளுக்குத் துணிவை கொடுத்த அதே காதல் வீரத்தையும் கொடுக்கிறது. பத்திரகாளியாக மாறி காதல் தேவனைக் கொன்றவனை பழிக்குப் பழிவாங்குகிறாள்; தானும் உயிரை விடுகின்றாள்.

இவ்வாறெல்லாம் வ.வே.சு. ஐயர் மங்கையர்க்கரசி எனும் பெண்ணின் தூய அன்பை அது வழங்கிய துணிவை சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார் எனலாம்.

தவறுக்கு மன்னிக்குக

சென்ற இதழில் உறவு முறைக்கடித உறுப்புகளில் 'முகவரி' என்பதற்குப் பதிலாக 'தலைப்பு' எனத் தரப்பட்டுள்ளது,

திருத்தம்: உறவு முறை கடித உறுப்புகள்

1. முகவரி 2. விளிப்பு 3. விடயம் 4. முடிப்பு

ஹதீஸ் பூங்காவிலிருந்து...(04ஆம் பக்கத் தொடர்...)

நபியவர்கள் கூறினார்கள்:

"மனிதர்களே! ஸலாத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள், ஏழைகளுக்கு உணவளியுங்கள், மக்கள் தூக்கத்திலிருக்கும்போது இரவில் நின்று தொழுங்கள் பாதுகாப்பாக சுவனம் நுழைவீர்கள்." (திர்மிதி)

இரவு நேரத்தில் நபியவர்கள் மிகவும் நீளமான ரக்அத்துக்களை தொழக்கூடியவர்களாக இருந்தார்கள். அதன் நீளத்தை, அழகைப் பற்றிக் கேட்க வேண்டாம் என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதனை ஒரு தடவை நபியவர்களுக்குப் பின்னால் இரவுத் தொழுகையில் நின்று தொழுத ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

எனவே, நாம் அடைந்திருக்கின்ற இந்த ரமழானின் இரவுகளை நீளமான ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகைகள் மூலம் அலங்கரித்து எமது பாவங்களையும் அல்லாஹ்விடத்தில் மன்னிக்கச் செய்து சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்ற இம்மாதத்தில் நாமும் சுவனம் நுழைய முயற்சிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஜனாதிபதியின்

உகண்டா விஜயம்

இலங்கை ஜனாதிபதியின் உகண்டா விஜயம் 2013 மே நடைபெற்றது.

இதன்போது விவசாயம், சக்தி வளம், வர்த்தகம் உட்பட பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டன.

உகண்டாவின் பருத்தி மற்றும் ஆடைக் கைத்தொழில், மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை என்பவற்றில் இலங்கை முதலீடு செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

வடக்கையும் கிழக்கையும்

இணைக்கும் புகையிரதப் பாதை

43 கிலோமீற்றர்கள் நீளமுடைய மதவாச்சி – மடு பகுதிகளுக்கு இடைப்பட்ட புகையிர பாதை மீள புனரமைக்கப்பட்டு 2013 மேயில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

இப்புனரமைப்பு இந்திய ரயில்வே நிர்மாண கம்பனியான IRCON இனால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

இப் புனரமைப்பிற்காக 81.34 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தம்

2013 மேயில் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் கூடியளவு மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டதுடன், 'மகாசென்' சூறாவளியும் தாக்கியிருந்தது.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

பாக்கிஸ்தானின் புதிய பிரதமர்



2013 மேயில் பாக்கிஸ்தானில் புதிய பிரதமராக நவாஸ் ஷெரீப் தெரிவு செய்யப்பட்டார்.

பாக்கிஸ்தான் முஸ்லிம் லீக்கின் வலதுசாரிக் கட்சி வேட்பாளரான நவாஸ் ஷெரீப் 86 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றார்.

63 வயதான இவர் 1990 - 93, 1997 - 99 ஆகிய இரு தடவைகள் பிரதமராக பதவி வகித்து, தற்போது மூன்றாவது தடவையாக பதவியேற்றுள்ளார்.

பலஸ்தீன் புதிய பிரதமர்

2013 ஜூனில் பலஸ்தீன் புதிய பிரதமராக பல்கலைக்கழக தலைவரான ரமி ஹம்தல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பலஸ்தீன பங்குச் சந்தை மற்றும் மத்திய தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் பொருளாதாரத் துறை நிபுணரும் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை – தாய்லாந்து
ஒப்பந்தங்கள்

2013 ஜூனில் தாய்லாந்து பிரதமர் யின்லக் ஷினாபாத்ரா இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது சுற்றுலாத்துறை, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் மேம்பாடு தொடர்பில் நான்கு ஒப்பந்தங்கள் சைச்சாத்திடப்பட்டன.

சர்வதேச கிரிக்கட் பேரவை (ICC)

சம்பியன்கள் கிண்ண கிரிக்கட் போட்டி

ஏழாவதும் இறுதியானதுமான ICC சம்பியன்கள் கிண்ண கிரிக்கட் போட்டி 2013 ஜூனில் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் நடைபெறுகின்றது.

1998இல் வேல்ஸ் சம்பியன் கிண்ணம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டி மினி உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் எனவும் அழைக்கப்பட்டது.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை உலகக் கிண்ண சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டிகளும், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சர்வதேச கிரிக்கட் பேரவை இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டிகளும் நடைபெறுவதால் இப்போட்டிகள் இவ்வாண்டு முடிவுக்கு வருகின்றது.

1998ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது போட்டியில் தென் ஆபிரிக்கா சம்பியனாகவும் 2009ம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனாகவும் ஆனது.

இக்கிண்ணத்தை தொடர்ச்சியாக இரு தடவைகள் (2006, 2009) அவுஸ்திரேலிய அணி வென்றமை குறிப்பிடத்தக்கது.

உலக பால் தினம்

வருடாந்தம் ஜூன் 1 இல் உலக பால் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

2012ம் ஆண்டில் இலங்கையின் பால் உற்பத்தி 299 மில்லியன் லீற்றர்களாகும். இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக புகைத்தல் மறுப்பு தினம் (World No Tobacco Day)



வருடாந்தம் உலக புகைத்தல் மே 31ம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலக சுகாதார அமைய நாடுகள் 1987இல் உலக புகைத்தல் மறுப்பு தினத்தை பிரகடனப்படுத்தியது.

இலங்கையில் 33% ஆண்களும் 2.6% பெண்களும் புகைத்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் வருடாந்தம் 20000 மக்கள் வரை புகைத்தலுடன் தொடர்புடைய நோய்களினால் இறக்கின்றனர்.

2013ம் ஆண்டிற்கான தொனிப்பொருள் 'Ban Tobacco Advertising, promotion and Sponsorship'

மலேஷிய பாராளுமன்ற தேர்தல்

2013 மேயில் மலேஷிய பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் பிரதமர் நஜீப் ரஸாக்கின் பரிசன் தேசிய கூட்டணி 222 ஆசனங்களில் 133 ஆசனங்களை ஆளுங்கட்சி பெற்றதன் மூலம் 56 வருட ஆட்சியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டது.

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி A

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 3 கொப்பிகளின் விலை ரூ. 54 எனின், 2 கொப்பிகளின் விலையைக் காண்க.
2. $k+7=11$ எனின், k இன் பெறுமானம் யாது?
3. சுருக்குக. $\frac{0.48}{0.4}$
4. உருவில் a இன் பெறுமானம் யாது?



5. ரூ. 750 பெறுமதியான பொருள் ஒன்றை ரூ. 820 இற்கு விற்கும்போது ஏற்படும் இலாபம் யாது?
6. சுருக்குக. $\frac{x}{(x-1)}-\frac{1}{(x-1)}$
7. 5070 g என்பதை kg இல் தருக.
8. உருவில் உள்ள நாற்பக்கலின் சுற்றளவு யாது?



9. மதிப்பீடு ஒன்றில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் வலையுரு வரையத்தில் தரப்பட்டுள்ளது. (40-50) இற்கு இடையில் 2 மாணவர்கள் இருப்பின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?



10. உருவில் 3 அரை வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. $AB=21cm$ எனின் வட்டமொன்றின் ஆரையின் பெறுமானம் யாது?



11. உருவிலுள்ள தரவுகளுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.



12. காரணி காண்க. $(x^2-1)-(x-1)$
13. கீழே தரப்பட்டுள்ள எண் பரம்பலின் ஆகாரப் பெறுமானத்தைக் காண்க.

   8, 9, 13, 8, 11, 15, 11, 7, 11

14. 8% எளிய வட்டி வழங்கும் வங்கி ஒன்றில் குறித்த தொகையை வைப்புச் செய்த ஒருவரின் கணக்கில் ஒரு வருட இறுதியில் ரூ. 3240 காணப்படின் அவர் வருட ஆரம்பத்தில் எவ்வளவு தொகையை முதலீடு செய்திருப்பார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உருவில் O வை மையமாகக் கொண்ட ஒரு அரை வட்டம் தரப்பட்டுள்ளது. அதில் a, x இன் பெறுமானங்களைக் காண்க.



16. சூத்திரம் $V = \frac{1}{3}\pi r^2 h$ இல் h ஐ எழுவாயாக மாற்றுக.

17. $A(0,4)$, $B(2,-2)$ எனும் புள்ளிகளினூடாக செல்லும் நேர்கோட்டின்

i. படித்திறன்

ii. வெட்டுத் துண்டு என்பவற்றைக் காண்க.

18. $\lg x = 2\lg a + \lg b$ எனின் x இனை a, b சார்பாகத் தருக.

19. உருவில் $AD = AB$, $AE = BC$, $ED = CD$, $A\hat{E}D = B\hat{C}D$ எனின், ΔABD ஆனது சமபக்க முக்கோணியாக இருப்பதற்கான காரணத்தைத் தருக.



20. ஆரை எத்தனை அலகாக இருக்கும்போது கோளத்தின் கனவளவு கோளமொன்றின் மேற்பரப்பிற்கு சமமாக இருக்குமெனக் காட்டுக.

21. அருகில் தரப்பட்டுள்ள மாயச் சதுரத்தில் எத்திசையில் கூட்டினாலும் அவ்வெண்களின் கூட்டுத்தொகை சமனாகும் வண்ணம் வர வேண்டிய இரு எண்களையும் வெற்றுக் கூட்டினுள் இடுக.

10	15	8
9	11	
	7	12

22. $1 \rightarrow 20000$ எனும் அளவிடைக்கு வரையப்பட்ட வயல் காணி ஒன்றின் அளவிடைப் படம் உருவில் தரப்பட்டுள்ளது.



i. உருவில் $1cm$ இனால் காட்டப்படும் உண்மை தூரம் எத்தனை மீற்றர்?

ii. காணியின் அகலத்தை km இல் தருக.

23. எண்கோட்டில் குறிக்கப்பட்டுள்ள x இன் தீர்வுகளுக்குரிய சமனிலியை எழுதுக.



24. $\left(a+\frac{1}{a}\right)=3$ எனின் $\left(a^2+\frac{1}{a^2}\right)$ இன் பெறுமானத்தைக் காண்க.

25. உருவில் O வை மையமாக கொண்ட வட்டதில் $A\hat{O}B = 180^0$ எனின்



i. x இன் பெறுமானத்தையும்

ii. $C\hat{B}D$ இன் பெறுமானத்தையும் காண்க.

26. குறித்த நீர் தாங்கி ஒன்றினுள் குளாய் A இன் மூலம் நீரினை செலுத்தி 10 நிமிடங்களில் முற்றாக நிரப்ப முடியும். குளாய் B யின் மூலம் அதிலுள்ள நீரினை 20 நிமிடங்களில் முற்றாக வெளியேற்ற முடியும் எனின் தாங்கி வெறுமையாக உள்ளபோது இரு குளாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து வைத்தால் 1 நிமிடத்தில் தாங்கியின் நிரம்பும் பங்கு என்ன?

27. உருவில் $13cm$ ஆரையைக் கொண்ட வட்டத்தின் மையம் O ஆகும். $RQ = 5cm$ எனின் முக்கோணி POQ இன் பரப்பளவைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. வினா விடைப் போட்டியொன்றில் ஒருவன் அதிஷ்ட ஆசனத்தில் அமர்வதற்கான நிகழ் தகவு $\frac{1}{10}$ ஆகவும், அவன் ரூ. 10,000ஐ பரிசாக பெறுவதற்கான நிகழ்தகவு $\frac{1}{3}$ ஆகவும் இருப் பின் அதிஷ்ட ஆசனத்தில் அமர்ந்து ரூ. 10,000ஐப் பெறுவதற்கான நிகழ்தகவு யாது?

29. $a^{1/2} \times b^{1/2} = 6$ எனின் a, b என்பன நிறை எண்களாயின் அவை பெறத்தக்க இரு வித்தி யாசமான எண்களை எழுதுக.

30. A, B, C என்பன மூன்று வீடுகளாகும். A, B இலிருந்து சம தூரத்திலும் A இலிருந்து (B, C உள்ள பக்கத்தில்) $50m$ தூரத்திலும் பாடசாலை S காணப்படின் அதன் அமைவைக் காட்டும் விதத்தைப் பரும்படியாக படத்தில் குறித்துக் காட்டுக.



பகுதி B

01. மா, தேங்காய்ப் பூ, சீனி என்பன நிறைக்கேற்ப முறையே 7:3:5 என்ற விகிதத்தில் சேர்க்கப் பட்ட இனிப்பு பலகார வகையொன்று தயாரிக்கப்பட்டது.

i. இக்கலவையில் $750g$ தேங்காய்ப் பூ காணப்படின் சேர்க்கப்பட்ட மாவின் அளவு யாது? (2 புள்ளிகள்)

ii. இதிலுள்ள சீனியின் அளவினை முழுவதன் பின்னமாகத் தருக. (2 புள்ளிகள்)

iii. கலவையின் மொத்த நிறை யாதாக இருக்கும்? (2 புள்ளிகள்)

iv. சீனியினதும் மாவினதும் விலைகள் சமமா கவும் $1kg$ மாவின் விலையின் இரு மடங்கு $1kg$ தேங்காய்ப்பூவின் விலையாகவும் காணப்படும்போது $1kg$ சீனியின் விலை ரூ. 90 எனின் இக்கலவையைத் தயாரிப்ப தற்கான மொத்தச் செலவு யாது? (4 புள்ளிகள்)

02. உருவில் வீட்டு முற்றம் ஒன்றின் தரைத் தோற்றத்தின் கிடைப்படம் தரப்பட்டுள்ளது.



i. இதன் பரப்பளவைக் காண்க. (2 புள்ளிகள்)

ii. இதன் அகலத்தை விட்டமாகக் கொண்டு அரைவட்ட வடிவான மேடைகள் இரண்டு இரு அகலப் பக்கங்களிலும் அமைக்கப்பட வேண்டுமாயின் அதனைப் பருமட்டாக வரிப்படத்தில் வரைந்து காட்டுக. (2 புள்ளிகள்)

iii. மேடைகளின் பரப்பளவுகளைக் காண்க. (2 புள்ளிகள்)

iv. மேடை தவிர்ந்த எஞ்சிய பகுதிகளில் புற்கள் நடப்பட்டால், புற்கள் நட $1m^2$ ற்கான செலவு ரூ. 20 எனின் மொத்தச் செலவைக் காண்க. (3 புள்ளிகள்)

03. உள்ளூராட்சி மன்றத்தினால் வீடு ஒன்றுக்கு கணிக்கப்பட்ட ஆண்டுப் பெறுமானத்திற்கும் அதற்காக அறவிடப்படும் ஆண்டு வரிக்கு மிடையிலான விகிதம் 8:3 ஆகும்.

i. வரியானது ஆண்டுப் பெறுமானத்தின் என்ன சதவீதம்? (2 புள்ளிகள்)

ii. இவ்வீட்டிற்கு காலாண்டு வரியாக ரூ. 3000 அறவிடப்படின் ஆண்டு வரியாக எவ்வளவு தொகை செலுத்த வேண்டும்? (2 புள்ளிகள்)

iii. வீட்டிற்கு கணிக்கப்பட்ட ஆண்டுப் பெறுமானம் யாது? (3 புள்ளிகள்)

iv. இவ்வீட்டின் உரிமையாளர் இவ்வீட் டினை ரூ. 5000ற்கு மாத வாடகைக்கு கொடுத்து, அதிலிருந்து பெறும் வாட கையிலிருந்து வரியைச் செலுத்திய பின்னர், 1 வருட இறுதியில் அவரிடம் காணப்படும் தொகை யாது? (3 புள்ளிகள்)

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

விஞ்ஞானம்



இரசாயனவியல்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

தரம் 10 இரசாயன மாற்றங்கள்

தாக்கத் தொடர் அல்லது தொழிற்பாட்டுத் தொடர்

- உலோகங்கள் வளி, நீர், அமிலங்களுடன் காட்டும் தாக்கத்தின் அடிப்படையில் இறங்கு வரிசைப்படி உலோகங்களை அடுக்கி வரும் தொடர் தாக்கத் தொடர் எனப்படும்.
- H (ஐதரசன்) உலோகங்களைப் போல் நேர் அயன்களை உருவாக்குவதால் அதுவும் இத் தொடரில் சேர்க்கப்பட்டது.
- தாக்கத் தொடரில் மேலேயுள்ள உலோகங் களின் உப்புகள் உறுதியானவை; அவை இலகு வில் பிரிகையடையாது.

01. அருகில் தரப்பட்டுள்ள தாக்க வீதத் தொடரை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக் களுக்கு விடையளிக்குக.

K
Na
Ca
Mg
Al
Zn
Fe
Sn
Pb
Cu
Hg
Ag
Pt
Au

i. உலோகங்கள் காட்டும் எத்தாக்கங்கள் தாக்க வீதத் தொடரை அமைப்பதற்கு பயன்படுகின்றது?

ii. தொழிற்பாட்டுத் தொடரில் மேலேயுள்ள உலோகம் அதன் கீழுள்ள உலோகத்தை அவ்வுலோகத்தின் உப்புக் கரைசலிலிருந்து இடம்பெயர்க்கும் என்பதைக் கண்டறி வதற்குப் பொருத்தமான பரிசோதனை ஒன்றைக் குறிப்பிடுக.

iii. H ஓர் உலோகம் அல்லாவிடினும் அது தாக்கத் தொடரில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணம் யாது?

iv. இத்தாக்க வீதத் தொடரில் H எம்மூலகங் கள் இரண்டிற்குமிடையில் அமைந்துள் ளது.

v. பின்வரும் முறைகளில் பிரித்தெடுப்புச் செய்யப்படும் உலோகங்களை எழுதுக.

a. அகழ்தல், தூய உலோகத்தை வேறாக்குதல்

b. வளியில் வறுத்தல்

c. காபன் அல்லது கற்கரியுடன் வெப்பமாக் கல்

d. மின் பகுப்புச் செய்தல்

இரும்பு பிரித்தெடுப்பு

* ஏமற்றைற்று (Fe_2O_3) எனும் இரும்புத் தாதை கற்கரி (C), சுண்ணக்கல் ($CaCO_3$) என்பவற்றுடன் சேர்த்து மிக உயர் வெப்பநிலையில் தாக்க முறச் செய்யப்பட்டு தூய இரும்பு வேறாக்கப் படும். இது இராசாயனத் தாழ்த்தல் முறை ஆகும்.
* ஊதுலையினுள் கரி ஒட்சிசனுடன் எரிவதாலும் சுண்ணக்கல் பிரிகையடைவதாலும் CO_2 வாயு தோன்றும்.
* ஒட்சிசன் அற்ற நிலையில் கரியும் CO_2 வாய்வும் தாக்கமுற்று காபனோரொட்சைட்டு வாயு தோன்றும்.
* ஏமற்றைற்று காபனோர் ஒட்சைட்டுடன் தாக் கமுற்று தூய இரும்பு உருவாகும்.

02.

i. இரும்பு பிரித்தெடுப்பு ஊதுலையினுள் CO_2 வாயு தோன்றும் இரு தாக்கங்களுக்குமுரிய சமன்பாடுகளை எழுதுக.

ii. ஏமற்றைற்று CO_2 வாயுவுடன் தாக்கமுற்று தூய இரும்பு உருவாகும் தாக்கத்தின் சமப்படுத்திய இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

iii. உருவாகும் தூய இரும்பின் மீது கல்சியம் சிலிக்கேற்று கழிவு மிதந்தவாறு காணப்படும். இது மேலே காணப்படுவதால் இரும்பிற்கு கிடைக்கும் நன்மை யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசாயனத் தாக்கங்களின் தாக்க வீதம்

- இரசாயனத் தாக்கங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை உறுதிப்படுத்த பின்வரும் சான்றுகளைக் கருத முடியும்.
  1. தாக்கிகள் அற்றுப்போதல் (அழிவுறல்)
  2. தொகுதியில் வெப்பமாற்றம் ஏற்படல்
  3. வாயு வெளியேறுதல்
  4. வீழ்படிவு தோன்றுதல்
  5. நிறமாற்றம் ஏற்படுதல்

03. இரசாயனத் தாக்க வீதம் பற்றி அறிய தயாரிக்கப்பட்ட 3 பரிசோதனை அமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.



1. இங்கு தாக்க வீதத்தைப் பாதிக்கும் எக்காரணிகள் பரிசோதிக்கப்படுகின்றன?
2. இங்கு சோதிக்கப்படும் காரணிகள் தவிர்ந்த தாக்க வீதத்தினைப் பாதிக்கும் வேறு 3 காரணிகளை எழுதுக.
3. மக்னீசியம் ஐதரோ குளோரிக்கமிலத்துடன் காட்டும் தாக்கத்திற்கான சமப்படுத்திய இரசாயனச் சமன்பாட்டினை எழுதுக.
4. ஐதரசன் பரவொட்சைட்டுத் திரவம் கபில நிற போத்தலினுள் சேமிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு சேமிக்கப்படுவதன் காரணம் யாது?
5. தாக்க வீதத்தை அளவிடுவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய அளவீடுகள் 2 தருக.

விடைகள்

1. பௌதிக நிலை, செறிவு
2. வெப்பநிலை, அமுக்கம், ஊக்கி, ஒளி
3. $Mg + 2HCl \longrightarrow MgCl_2 + H_2$
4. ஒளி காரணமாக இரசாயன தாக்கங்களின் தாக்கவீதம் அதிகரிக்கும். எனவே, ஒளியினால் ஐதரசன் பரவொட்சைட்டு பிரிகையடைவதைத் தடுக்க இவ்வாறு செய்யப்படுகின்றது.
5. ◆ தாக்கமுறும் (விரயமாகும்) தாக்கியின் அல்லது உருவாகும் விளைவின் அளவு.
   ◆ அத்தாக்கம் நிகழ எடுத்த நேரம்.

தகனம்

- தகனம் எனப்படுவது ஒரு பொருள் தகனத் துணையுடன் (CO_2) தாக்கமுற்று வெப்பத்தையும் ஒளியையும் வெளிவிடும் செயன்முறை ஆகும்.
- தகனத்திற்கு அவசியமான காரணிகள்:
  1. எரிபொருள்
  2. எரிபற்று நிலை
  3. தகனத் துணையி - ஒட்சிசன்
- எல்லா ஐதரோ காபன்களினதும் தகனத்தில் உருவாகும் விளை பொருட்கள்: காபனீரொட்சைட்டு வாயு, நீராவி என்பனவாகும்.

04.

1. புரப்பேன் (C_3H_8) என்பது திரவ பெற்றோலிய வாயுவிலுள்ள ஒரு கூறாகும். இது நிறை தகனத்திற்கு உட்படும்போது நிகழும் தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டை எழுதுக.
2. புரப்பேன் குறை தகனத்திற்கு உள்ளானால் அதன் தகனத்தின் இயல்புகள் மூன்றை எழுதுக.
3. மெழுகுவர்த்தி எரியும்போது பின்வரும் வலயங்களில் நிகழும் தாக்கங்களை எழுதுக.
   A. இருள் வலயம் : ....
   B. ஒளிரும் வலயம் : ....
   C. கட்புலனாகாத வலயம் : ....
4. சோடியம், பெற்றாசியம் போன்ற உலோகங்கள் சார்ந்த தீயை அணைக்கப் பொருத்தமான தீயணை கருவி ஒன்றைக் குறிப்பிடுக.

கனியங்களும் பாறைகளும்

- நிலையான கட்டமைப்புடைய, ஏகவினமான கேத்திர கணித வடிவமுடைய, பளிங்குருவான அசேதனப் பொருள் கனியம் எனப்படும்.
  உ+ம்: காரீயம், வைரம், படிகம், பொன்
- பல கனியங்கள் சேர்ந்த நிலையான கட்டமைப்புடைய குறித்த கேத்திர கணித வடிவமற்ற பல்லின அசேதனப் பொருள் பாறை ஆகும்.
  உ+ம் கருங்கல்
- பாறைகள் 3 வகைப்படும்:
  1. தீப் பாறை: கருங்கல், பெக்மரைற்று, பசோல்ற்று
  2. அடையற் பாறை: சுண்ணக்கல், உறை களிக்கல்
  3. உருமாறிய பாறை: மாபிள், சிலேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலின் சமநிலையைப் பேணுதல்

✎ வளியின் சாதகமான (இயல்பான) அமைப்பு மாற்றமடைவதற்கு பின்வரும் பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைகின்றன.

1. கைத்தொழில் மயமாக்கத்தினால் சுவட்டு எரிபொருட்களின் பாவனை அதிகரித்தல்.
2. இயற்கை, செயற்கை கழிவுகள் அதிகரித்தல்
3. எல்லையற்ற காடழிப்பு
4. இயற்கை அனர்த்தங்கள்

01. பின்வரும் மாசாக்கிக் கூறுகள் வளியுடன் சேர்க்கப்படும் முறைகளை எழுதுக.

கூறுகள்	வளியில் சேர்க்கப்படும் முறைகள்
i. CO_2, CO வாயுக்கள்	....
ii. SO_2 வாயு	....
iii. NO, NO_2 வாயுக்கள்	....
iv. ஐதரோ காபன்கள்	....
v. அலசனேற்றப்பட்ட ஐதரோ காபன்கள்	....
vi. திண்மக் கழிவுகள்	....

பச்சை வீட்டு விளைவு:

புவி வெப்பமடைந்து கதிர்க்கப்பட்டு வெளியேறிச் செல்லும் செங்கீழ்க் கதிர்களை வளிமண்டலத்தில் உள்ள வாயுக்கள் தடுப்பதனால் புவி மேலும் வெப்பமடையும். இதுவே பச்சை வீட்டு விளைவு எனப்படும்.

பச்சை வீடாகத் தொழிற்படும் வாயுக்கள்:

காபனீரொட்சைட்டு, மெதேன், குளோரோ புளோரோ காபன், நீராவி

02. பச்சை வீட்டு விளைவினால் ஏற்படக்கூடிய 3 பாதிப்புகளைக் குறிப்படுக.

03. அமில மழை பெய்தல் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புகள் மூன்றை எழுதுக.

04. ஓசோன் படையில் துளை ஏற்படக் காரணமான மனித செயற்பாடுகள் மூன்றை எழுதுக.

நீரின் வன்மை

✎ நீரிலுள்ள கல்சியம், மக்னீசியம், அயன்களின் காரணமாக சவர்க்காரத்தின் தொழிற்பாடு தடைப்படும் தன்மை நீரின் வன்மை ஆகும். இது 2 வகைப்படும்.

1. நிலையில் வன்மை: Ca, Mg இன் இரு காபனேற்றுகளால் ஏற்படும். இவ்வுப்புகளை வெப்பமேற்ற காபனேற்றாகப் படிவுறும்.
2. நிலையான வன்மை: Ca, Mg இன் சல்பேற்றுகள், குளோரைட்டுகளினால் ஏற்படும். இவற்றை வெப்பமேற்றி அகற்ற முடியாது.

✎ நீரின் நிலையான வன்மையை அகற்றும் முறைகள்

1. சலவைச் சோடா சேர்த்தல்
2. அயன் பரிமாற்றம் செய்தல்

நற்போசணையாக்கம்:

விவசாய நிலங்களுக்கு இடப்படும் உரங்கள், மலசலங்கள், வீட்டுக் கழிவுகள் என்பன நீர் நிலைகளை அடைவதனால் அல்காக்களின் வளர்ச்சி அதிகரிப்பதனால் சுவாச வாயுப் பற்றாக் குறையால் நீர் நிலையிலுள்ள உயிரினங்கள் இறந்து பிரிந்தழிந்து விரும்பத்தகாத மணத்தைத் தோற்றுவிக்கும் செயற்பாடு நற்போசணையாக்கம் எனப் படும்.

05. i. நீரின் உவர் திறனை அதிகரிக்கும் காரணிகள் எவை?

ii. நீரின் பண்பைப் பாதிக்கும் பார உலோகங்கள் 5 எழுதுக.

iii. நீரில் கட்மியம், ஈயம் அதிகரிப்பதால் ஏற்படும் தீமைகள் 2 வீதம் எழுதுக.

iv. சூழலில் இரசம் சேர்வதற்குக் காரணமான செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

மண்ணின் தன்மை

▶ மண்ணில் சேதனச் சேர்வைகளுடன் வேறுபட்ட அளவுகளில் வளி, நீர், அசேதனப் பதார்த்தங்கள், மண் அங்கிகள் என்பன காணப்படும்.

(41ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழானைத் திட்டமிடுவோம்

▶ அலா அஹமட்

தம்பி, தங்கையரே மீண்டுமொரு கண்ணியம் பொருந்திய புண்ணியம் பூத்த, ஆன்மிக உணர்வு சொரியும் புனித மாதம் எம்மை அண்மித்து விட்டது. நீங்கள் இந்த மாதத்தை வரவேற்கத் தயாராகி விட்டீர்களா? இந்த மாதத்திற்கான உங்கள் திட்டங்கள்தான் என்ன? எம்மைக் கடந்து சென்ற முன்னைய ரமழான்களைப் போன்றா இந்த ரமாழானையும் கழிக்கப் போகிறோம்? என்பன போன்ற கேள்விகளை எமக்குள் நாமே கேட்டு இதற்கு விரைவாக விடை தேடவேண்டிய தருணங்களில் அமர்ந்துள்ளோம்.

பாவங்களை சுட்டெரிக்கும், நன்மைகளை தேடிக் கொள்ளும், தக்வாவை அதிகரித்துக் கொள்ளும், ஆன்மிக பக்குவத்தை உயர்த்திக் கொள்ளும் சிறந்த பயிற்சிக் களமாகிய ரமழானை எப்படி நாம் கழிக்கப் போகிறோம் என்ற விடயம் முக்கியத்துவமானதாகும்.

ரமழானுக்காக முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. நம் சிறார்களும் இளைஞர்களும் கூட்டம் கூட்டமாக வீதியோரங்களிலும், கடைத் தெருக்களிலும், விளையாட்டு மைதானங்களிலும் பயன்படுத்தப்படாத இடங்களிலும் சேர்ந்து விடுவார்கள். சில பிரதேசங்களில் பின்னேர வகுப்புக்களுக்குகூட விடுமுறை வழங்கப்படுகிறது. எம் மாணவர்களில் பலர் இக்காலத்தில் பாடசாலைப் புத்தகங்களை தொடுவதேயில்லை என ஒரு மூலையில் தீண்டாப் பொருளாக வைத்து விடுகின்றனர். இன்னும் சிலர் இம்மாதத்தை அதிகம் தூங்குவதற்கான தருணங்களை எதிர்பார்த்திருந்து போலவும் இன்னும் சிலர் வாய் ருசிக்க உண்ணுவதற்கும், வீண்விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கும் தயாராகி இருப்பர். ரமழானில் எப்படித் தான் இந்தப் பிள்ளைகளை மேய்க்கப் போகிறோம் என பல பெற்றோர்கள் முணுமுணுப்பதையும் காணமுடியும்.

இஸ்லாமிய வரலாற்றிலே இந்த ரமழான் வரலாற்றுத் திருப்பங்களை, புரட்சிகளை செய்துள்ளது. பத்ர் யுத்தம், மக்கா வெற்றி, உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ரோம் படையெடுப்பு, ஸலாஹுத்தீன் ஐயூபியுடைய ஹித்தின் போராட்டம், மம்லூக்கியருக்கு எதிரான ஐன்ஜாலூத் போராட்டம், தாரிக் பின் ஸியாத் என்ற இளைஞனின் தலைமையிலான ஸ்பெய்ன் வெற்றி என பல சாதனைகளை பெற்றதும் இதே ரமழான் மாதத்தில்தான்.

எண்ணமே வாழ்க்கையாக மாறுகின்றது. எனவே, எமது எண்ணங்களையும் புரட்சிகரமான மாற்றத்திற்கு தயார்படுத்துவோம்.

"எண்ணங்களின் பெருக்கமே மனிதன். அவன் என்ன எண்ணுகின்றானோ அதே ஆகிறான்." என்ற மகாத்மா காந்தியின் கூற்றும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உறுதியான எண்ணங்களின் அடியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதத்தை எப்படிக் கழிக்கப் போகிறோம் என்ற திட்டமிடலை போடுவோம். ஏனெனில், திட்டமிடப்படாத செயல்கள் வெறும் கனவாகவே மாறும். அதே போன்று, "நாம் திட்டமிடுதலில் தவறு விடுகின்ற போது, தவறுவிடத் திட்டமிடுகிறோம்" என்ற பெஞ்ஜமின் பிரேங்ளினின் கூற்றை மனதில் கொள்வோம்.

முழு மதத்திற்கான எமது திட்டமிடலை வேண்டும். அதன்பின் அதை வாராந்தம் பிரித்து ஒரு வாரத்தில் நாம் செய்ய வேண்டிய இலக்குகளை திட்டமிடுவோம். பின் ஒரு நாளில் நாம் அடைய வேண்டிய திட்டமிடலைப் போடுவோம். ஏனெனில், நாட்கள் சிறப்பாக மாறுகின்றபோது அந்த வாரம் பிரயோசனம் மிக்கதாக மாறும். வாரங்கள் சிறப்பாக மாறுகின்றபோது ரமழான் மாதம் பிரயோசனம் மிக்கதாகவும் வினைதிறன் மிக்கதாகவும் மாறும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, திட்டமிடலை இன்றே, இப்போதே தொடங்குவோம். ஏனெனில், "நேரத்தை தள்ளிப் போடாதே! தாமதங்கள் அபாயகரமான முடிவை தரும்." என்ற ஷேக்ஸ்பியரின் கருத்து குறிப்பிடத்தக்க தாகும்.

ஆரம்பமாக எமது திட்டமிடலில் இபாதத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம். ஏனெனில், ரமழான் நன்மைகளை அதிகம் சம்பாதிக்கக்கூடிய, அதிக கூலிகள் கிடைக்கக் கூடிய மாதம். ஏனைய பல மாதங்களில் செய்து பெறப் படும் நன்மைகளை விடவும் மிகக் கூடுத லான நன்மைகளை ஒரே மாதத்தில் பெற்றுத் தரக்கூடிய மாதம். எனவே, அதிகமதிகம் குர்ஆனை ஓதுவதற்கும் அதிக நபிலான தொழுகைகளை தொழு வதற்கும் ஏனைய இபாதத்துகளை செய் வதற்கும் எமது திட்டமிடலில் நேரத்தை ஒதுக்குவோம்.

சமூக சேவையினையும் எமது திட்டமிடலின்போது சேர்த்துக் கொள்வோம். இப்தார் ஏற்பாடுகள், பள்ளிவாசல் துப்பரவு செய்தல், பள்ளிவாசல் நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு உதவுதல், மையவாடி துப்பரவு செய்தல், கூட்டு ஸகாத் வினியோகம் போன்ற பணிகளையும் இம்மாதத்தில் மேற்கொள்ளலாம்.

அதேபோன்று, எமது ஆளுமைகளையும் எமது திறன்களையும் வளர்த்துக் கொள்ளும் காலமாக மாற்றிக் கொள்வோம். ஏனெனில், "இன்றைய நாள் மட்டுமே நம்முடையது. நேற்றைய தினத்திற்கு நாம் இறந்தவர்கள், நாளைய தினம் நாம் பிறக்காதவர்கள்" என்ற Pericles கருத்தை மனதில் கொள்வோம். எமது பேச்சாற்றலை, எழுத்தாற்றலை, சிந்தனை செய்யும் திறனை வித்தியாசமாக, புதுமையாக சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வோம். இதுபோன்ற அமைதியான நாட்களில்தான் அதிகமதிகம் நூல்களை வாசிக்க முடியும். எமது பாடசாலை பாடங்களை மீட்டிக் கொள்ள இது சிறந்த சந்தர்ப்பமாகும். அதேபோன்று குர்ஆனை அழகாக தஜ்வீத் முறைப்படி ஓதுவதற்கான பயிற்சியையும் இந்தக் காலத்தில் பெற முடியும். எனவே, இவைகளையும் எமது திட்டமிடலின்போது மனதிற் கொள்வோம். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னார்கள்: "சோலிகள் வருமுன் ஓய்வு நேரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள், முதுமை வருமுன் இளமையை பயன்படுத்திக் கொள்ளுங்கள், நோய் வருமுன் ஆரோக்கியத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

பெற்றோர் சகோதரர்களுக்கு உதவி செய்யும் விடயங்களை எமது திட்டமிடலின்போது சேர்த்துக் கொள்வோம். ஏனெனில், ரமழான் அனைவரும் இபாதத் செய்ய வந்த மாதம். எனவே, எமது தாய்க்கு சமையல் வேலையிலும், எமது தந்தைக்கு தொழில் நடவடிக்கையிலும் உதவி செய்வோம். எம் தம்பித் தங்கைகளுக்கு நாம் அறிந்தவற்றை கற்றுக் கொடுக்க முடியும். இவ்வாறு செய்வதினூடாக பெற்றோர், உறவினர்களின் அன்பையும் இறைவனின் அருளையும் பெற முடியுமாக இருக்கும்.

ரமழான் வந்தாலே ஊர்களில் கருத்து மோதல்களும், வாக்குவாதங்களும், சண்டைகளும் இயல்பாக வந்து விடுகின்றது. மாணவர்களாகிய நாம் இதிலிருந்து பூரணமாக விலகி இம்மாதத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவோம். **வெற்றி 'முடியும்' என்பதில் இருந்து வருகின்றது. தோல்வி 'முடியாது' என்பதிலிருந்து வருகின்றது.** எனவே, எம் வாழ்வில் பிரயோசனம் மிக்க வளமான, செழிப்பான காலமாக இம்மாதத்தை மாற்றுவோம்.

"உங்களுக்கு கூழாங் கற்கலாக தோன்றுபவற்றை முடியும் வரை சேமித்துக் கொள்ளுங்கள். எதிர்காலத்தில் அவை வைரக் கற்கலாக மாறலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோதரர்களே! விழித்திருங்கள்...
விடிவு என்பது நாளை நமக்குண்டு
சகோதரர்களே! முயற்சியை விடாதீர்...
வெற்றி என்பது நமக்குரியது...
கஷ்டங்களும்... நஷ்டங்களும்...
அவன் நாட்டப்படியே!
என நினைத்திடுங்கள்...

விழித்திரு...

வருவது அதிஷ்டங்கள்
அன்பர்களே! கல்வியை கற்றுக்கொள்
அதைவிட பெரிய செல்வத்தை
பெற்றுக் கொள்ள மாட்டீர்...
புது உறவுகளே! வெற்றியை எவ்வாறு
பெற்றுக் கொள்கிறோமோ...
அதேபோல்
தோல்வியையும் கற்றுக் கொள்...
உன் உள்ளம் நடு நிலையில் நிற்கும்.
விழித்திரு...
விடிவு வந்தவுடன் வெற்றியோடு என்
கவிதை மீண்டும் வரும்...

ஷப்னா ஹுசைன், தரம் 9
வெலம்பொட மு.ம.வி
வெலம்பொட

நெஞ்சத்துக்கு ஓர் ஒத்தடம்...

தோல்வியை எதிர்கொண்டுவிட்டாயா?
அது ஒரு சவாலின் ஆரம்பம்தான்
ஆரம்பமே தோல்வி என்று
கலங்கி விடாதே!
துணிவுடன் நடக்கப்பார்
தோல்விகள்தான் உன்னை
சாதிக்க வைக்கும் ஊன்றுகோல்கள்

தோல்வியின் ஆரம்பம்
சோதனையும் கலங்கமும்தான்
ஆனால் அவைதான் உன்
சாதனைக்கு பறைசாற்றும்
வெற்றிக் கொடிகள்

இறை நம்பிக்கையும் உன் முயற்சியும்
உன்னில் சேர்ந்திருக்கும் வரை
இறையருளால்
வெற்றிகள் உன்னைத் தேடி
வந்து கொண்டே இருக்கும்

அஸ்மத் பாத்திமா பிந்த் ஹுஸைன்
கல்முனை

ஆர்.எம் ஹஸன்

அன்புத் தாய்

பத்துத் திங்கள் என்னை
உன் வயிற்றில் சுமந்தாய் - என்
அன்புத் தாய்...

ஐந்து வயது முடியும் வரைக்கும்
உன் கையில் என்னை
அள்ளிக் கொண்டாய் அன்போடு
அணைத்துக் கொண்டாய் - என்
அன்புத் தாயே...

என்னைப் பற்றி நான்
அறியாததை - நீ அறிந்தாய்
அதனால் நான் ஆனேன்
பெரியவனாய்...
நான்கு பேர் போற்றும் - உன்
மகனாய்...

என்னை நீ பெற்றது தவம்
என்று சொல்வாய் - நான்
உன் மகனாய் பிறந்தது வரம்
என்று சொல்கிறேன் - எனக்கு
கிடைத்த வரம் என்று சொல்கிறேன்...

என் ஆயுள் முழுதும்
உனக்காகவே - உயிர்
தந்த என் தாயே!
ஆயுள் முழுதும் உனக்காக...

ஆசான்களே...



எங்கள் பாடசாலையில்
கடமை புரியும் ஆசான்களே!
அத்தனை காலமும் கற்றுத் தந்து
இத்தனை காலமும் நிலைத்துள்ளீரே

பல்வேறு பாடங்கள் என
மனதிற்கினிவாய் கற்பிக்கிறீர்கள்!
எங்கள் மீது பாசமழை பொழிகிறீர்கள்...
தினமும் புன்னகை புரிகிறீர்கள்!

ஆசான்களின் பூந்தோட்டமே நீங்கள்
மாணவர்களை ஈர்த்த
கள்ளமில்லா உள்ளத்துடனே
கற்றுத் தரும் ஆசான்களே!

மு.நி. தாஜ் அப்ஷான் நிஸா
தி/ குறிஞ்சாக்கேணி ம.ம.வி.
கிண்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

'அ' பகுதிக்குப் பொருத்தமான விடைகளை 'ஆ' பகுதியிலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

அ		ஆ
1. வண்ண மலர்கள்	......	1. புழு
2. பாழடைந்த வீடுகள்	......	2. விமானம்
3. அழுகிய பழம்	......	3. வெளிச்ச வீடு
4. கடவுச்சீட்டு	......	4. தேனீ
5. கடற்கரை	......	5. வெளவால்

சரியான விடைக்குக் கோடிடுக.

6. வயிற்றோட்டத்தினால் அவன் துடிதுடித்தான். வயிற்றோட்டத்திற்கான காரணம்?
   i. நுளம்பு கடித்திருக்கும்
   ii. உணவில் ஈ மொய்த்திருக்கும்
   iii. வயிற்றில் அடி விழுந்திருக்கும்

7. அவன் பரீட்சையில் சித்தியடையவில்லை.
   i. அவன் கண்ணுங்கருத்துமாக கற்றிருப்பான்.
   ii. அவன் அதிக மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்றிருப்பான்.
   iii. அவன் பரீட்சையில் ஊக்கமின்றி இருந்திருப்பான்.

8. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தது.
   i. கம்பம் சிறிதாக காணப்பட்டதால்
   ii. தேசிய விழா ஒன்று அனுஷ்டிக்கப்பட்டதால்
   iii. தேசிய துக்க தினம் ஒன்று அனுஷ்டிக்கப்பட்டதால்

9. கண்டியில் உள்ள கடலில் குமரன் நீராடினான். வாக்கியம் பிழையானதற்கான காரணம்?
   i. கண்டியில் உள்ள கடல் ஆழமானது.
   ii. கண்டியில் கடல் இல்லை.
   iii. கண்டியில் உள்ள கடலில் உப்பு அதிகம்.

10. புலி பசித்தாலும் புல் தின்னாது.
   i. புலி ஓர் ஊண் உண்ணி.
   ii. புலி ஒரு தாவர உண்ணியாகும்.
   iii. புலி காய்ந்த புல்லை மட்டுமே உண்ணும்.

பின்வரும் உருக்களுடன் தொடர்பான உருக்களை அவதானித்து மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.



11. தொலைத்தொடர்பு சாதனங்கள் உள்ள உருக்களைக் குறிக்கும் எழுத்துத் தொகுதி.
   i. FGH ii. AFH
   iii. CEJ

12. தச்சன் பாவிக்கும் உபகரணங்களின் தொகுதியைச் குறிக்கும் எழுத்துத் தொகுதி.
   i. JIL ii. LEC
   iii. DIJ

13. கற்றல் சம்பந்தமாக பாவிக்கப்படும் தொகுதி.
   i. ECK ii. KBD
   iii. EFC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. விளையாட்டு உபகரணங்களைக் குறிக்கும் எழுத்துத் தொகுதி.

i. GBD ii. GBA
iii. GCB

பின்வரும் சொற்கள் அகர வரிசைப்படுத்தப்பட்ட ஒழுங்கின் கீழ் கோடிடுக.

15. A கூவும், B கிளி, C காலை, D கைம்பெண்

i. CDBA ii. CBAD
iii. CBDA

16. A வீரன், B வேதனை, C வெறுப்பு, D வாழ்வு

i. DACB ii. DABC
iii. DBAC

அமைந்துள்ள கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

17.



i. 6 ii. 4 iii. 5

18



i. 15 ii. 12 iii. 14

19. 2012ம் ஆண்டு 90வது நாள் எத்தனையாம் திகதி?

i. 2012 ஏப்ரல் 1ம் திகதி

ii. 2012 மார்ச் 30ம் திகதி

iii. 2012 மார்ச் 28ம் திகதி

20. அமலனுடைய தந்தையின் தம்பி கமலன். கமலன் அமலனுக்கு என்ன உறவு முறை?

i. மருமகன் ii. சிற்றப்பா
iii. தம்பி

21. அருகிலுள்ள இரு உருக்களிலும் நிழற்றப்பட்ட பகுதியின் கூட்டுத்தொகை யாது?



i. 1/2

ii. 4/8

iii. 3/4

22. மூங்கில் தடியையும் இறப்பர் பந்தையும் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு.

i. கிரிக்கெட் ii. எல்லே
iii. ஹொக்கி

23. மலைநாட்டில் ஒரு பகுதியில் மண்சரிவு ஏற்படவுள்ளதை அப்பகுதி மக்களுக்கு அவசரமாக தெரியப்படுத்த மிக உகந்த தகவல்தொடர்பு சாதனம் எது?

i. வானொலி ii. தொலைபேசி
iii. ஒலிபெருக்கி

24. கிராமப்புற விவசாயிகள் அறுவடை செய்த நெற்கதிர்களை குவித்து வைத்திருக்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

i. களத்து மேடு ii. வக்கடை
iii. சூடடிக்குமிடம்

25. எமது உடல் ஆரோக்கியத்திற்கும் உள ஆரோக்கியத்திற்கும் உதவுவது.

i. விளையாட்டு ii. உடற்பயிற்சி
iii. யோகாசனப் பயிற்சி

26. கிராமிய விளையாட்டுக்களில் குழுவாக விளையாடும் விளையாட்டு.

i. கிட்டிப்புள் ii. சடுகுடு
iii. சில்லுக் கோடு

27. இலங்கையின் தென்மாகாணத்தில் போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட கோட்டையின் பெயர் என்ன?

i. கண்டி கோட்டை ii. காலி கோட்டை
iii. கொழும்பு கோட்டை

28. சீலா அனுலாவை விட நன்றாகப் பாடுவாள். அனுலா மாலாவை விட நன்றாகப் பாடுவாள் எனின், இவர்களில் மிக நன்றாக பாடுபவர் யார்?

i. சீலா ii. அனுலா
iii. மாலா

29. இலங்கையின் வெளியூருக்கு அனுப்ப வேண்டிய தபால்களை சேர்க்க வேண்டிய பெட்டியின் நிறம்

i. சிவப்பு ii. நீலம்
iii. பச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீட்டிற்கு பொருத்தமான பெயரை எழுதுக.



30. .... 31. .... 32. ....

33. கண்டிய நடனக்காரனின் தலையைக் கொண்ட தாள் காசு.

i. ரூபா 100.00 ii. ரூபா 50.00
iii. ரூபா 20.00

34. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக.



எந்தப் பொதியில் நிறை அதிகம்?

i. A ii. B
iii. C

35. அருகில் உள்ள உருவில் எத்தனை செங்கோண மூலைகள் உள்ளன?



i. 16
ii. 20
iii. 24

விஞ்ஞானம்....(35ஆம் பக்கத் தொடர்...)

- மண்ணின் தரத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை? மண்நீர், மண்வளி, களிமண் கூறுகள், அசேதனப் பதார்த்தம், உக்கல், சேதனச் சேர்வைகள்.
- மண்ணின் தரம் குறைவடைவதற்குக் காரணமான நடவடிக்கைகள் யாவை?

1. காடழிப்பு 2. மண்ணரிப்பு
3. அமில மழை
4. தொடர் விவசாய நடவடிக்கைகள்
5. இரசாயனப் பொருட்களின் பாவனை
6. கழிவுப் பொருள் வெளியேற்றம்

- பிளாத்திக்குகளை பிரிந்தழியச் செய்வதற்கு இரசாயனவியளாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எவை?

1. உயிரியல் படியிறக்கம் அடையக் கூடியவை
2. ஒளியியல் படியிறக்கம் அடையக் கூடியவை
3. நீரில் கரையக்கூடியவை

பொதுசன நூலகம்

- மண்ணில் அமிலத் தன்மை சேர்வதால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

1. சில அயன்கள் வீழ்படிவடையக்கூடிய சேர்வையாக மாறும்
2. பார உலோகங்களின் செறிவு மண்ணில் அதிகரிக்கும்
3. மண்ணின் போசணைப் பெறுமானம் குறைவடையும்

World Today... (29ஆம் பக்கத் தொடர்...)

உலகின் மிகச் சிறிய திரைப்படம்

2013 மேயில் தனிப்பட்ட மூலக் கூறுகளைப் பயன்படுத்தி உலகின் மிகச் சிறிய திரைப்படம் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டது,

IBM நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகளால் தனிப்பட்ட காபனோரொட்சைட் மூலக் கூறுகளை பயன்படுத்தி இத்திரைப் படம் உரு வாக்கப்பட்டுள்ளது,

இத்திரைப்படத்தின் பெயர் ‘சிறுவனும் அவ னது அணுவும்’ என்பதாகும்,

இத்திரைப்படம் 45 நனோ மீற்றர் நீளமும். 25 நனோ மீற்றர் அகலமும் உடையதாகும்,

இத்திரைப்படம் சிறுவன் ஒருவன் நடனமாடு வதையும் பந்து வீசுவதையும். பந்து அடித்து விளையாடுவதையும் கொண்ட ஒரு நிமிட வீடி யோ திரைப்படமாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பெட்டிகளினுள் வரவேண்டிய சரியான விடைகள் அடங்கிய தொகுதி.

________ பரடே ஒலி அதிர்வுகளை மின் அதிர்வுகளாக மாற்றி ________ பெற்றார். கிரஹம் பெல்லும் வாட்சனும் ________ உபயோகிக்கும் அளவுக்குத் தொலைபேசியை கொண்டுவந்தார்கள்.

1\. 1 [மைக்கல்] [வெற்றி] [பொதுமக்கள்] 2 [எடிசன்] [தோல்வி] [பொதுமக்கள்]

3 [கிரகம்] [வெற்றி] [பொதுமக்கள்]

மீன்களை வளர்ப்பது இன்று உலகில் வளர்ந்துவரும் மிகச் சிறந்த பொழுதுபோக்காகும். இயற்கையின் விந்தையை பல்வேறு வழிகளிலும் ________ கொள்ளக்கூடியதோடு மனதை ________ பொழுதுபோக்காகவும் அமைகிறது. சிறுவயதில் ________ இப்பொழுதுபோக்கில் ஈடுபடுவோமேயானால் நெருக்கடியான வாழ்க்கை முறையில் இருந்து எம்மை காப்பாற்றிக் கொள்ளலாம்.

2\. 1 [செல்லக] [கசக்கும்] [இருந்தே] 2 [அறிந்து] [சிரிக்கும்] [இருந்தே]

3 [அறிந்து] [மகிழ்விக்கும்] [இருந்தே]

கோடிட்ட பேச்சு வழக்கு சொல்லிற்கு எழுத்து வழக்கு சொற்களை எழுதுக.

தோட்டங்கள் <u>பிரிச்சிவச்சி</u> 3. ....

<u>தொரமார</u> காவல் வச்சி 4. ....

<u>துன்பங்கள்</u> தந்ததும் ஏன் 5. ....

<u>ஆச</u> மச்சானே 6. ....

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

7\. அபி அத செல்லங்கரமு :....................

8\. ஹெட மம எனவா :....................

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை தருக.

9\. March :.......................................

10\. Saturday :.......................................

11\. 3508 இற்குச் சமனான விடையைத் தெரிவு செய்க.

i. (35 x 100) + (100 x 8)
ii. (35 x 100) + (10 x 8)
iii. (35 x 100) + (1 x 8)

12\. பிலால் நாளொன்றில் 3/4 பங்கு நேரத்தை தூக்கத்தில் கழிப்பான். அவன் ஒரு நாளில் தூங்காமல் இருக்கும் நேரம் எத்தனை மணித்தியாலம்?

i. 18 மணித்தியாலங்கள்
ii. 6 மணித்தியாலங்கள்
iii. 12 மணித்தியாலங்கள்

13\. மூன்று வகுப்புகளில் இருந்த மாணவர்களின் தொகை 105 ஆகும். அதில் 1/3 பங்கினர் பெண் பிள்ளைகளாவர். வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?

i. 30 ii. 70
iii. 35

14\. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?



i. 1/4
ii. 1/2
iii. 1/8

15\. எண்கள் அமைந்துள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றுக்கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

7	11	4
.....	9	7
9	16	7

i. 2
ii. 5
iii. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எறும்பின் வேகம் ஒரு நிமிடத்திற்கு 4cm ஆகும். எறும்பு நேராக சென்று B என்ற இடத்தை சென்றடைய 15 செக்கன் எடுக்கும் எனின், எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

i. 50cm ii. 1cm
iii. 25cm

17. யூசுப் தனது 10வது பிறந்த நாளை 2009ஆம் ஆண்டில் கொண்டாடினான். அவன் 6வது பிறந்த நாளை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பான்?

i. 2006இல் ii. 2007இல்
iii. 2005இல்

18. மாணவர் குழுவொன்று காந்தங்களுக்கு அருகே சில பொருட்களை கொண்டு சென்ற போது அவற்றை காந்தம் கவரவில்லை. அப்பொருள் எதுவாக இருக்கும்?

i. இரும்புக் கம்பி ii. அலுமனியத் தகடு
iii. இரும்பு ஆணிகள்

19. மனதை ஒருமுகப்படுத்த உதவுவது.

i. விளையாட்டு ii. தொலைக்காட்சி
iii. தியானம்

20. கண்டி, பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய நகரங்களை எவ்வாறு அழைப்பர்?

i. மாவட்ட தலைநகரங்கள்
ii. வர்த்தகப் பிரதேசம்
iii. கலாசார முக்கோணப் பிரதேசம்

21. இலங்கையின் மேல் மாகாணத்தில் அடங்காத மாவட்டம் எது?

i. கம்பஹா ii. கொழும்பு
iii. சிலாபம்

22. பொலித்தீன் பற்றிய பிழையான கூற்று எது?

i. பொலித்தீன் வடிகால்களை அடைப்பதனால் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம்.
ii. பொலித்தீனை எரிக்கும்போது வெளியேறும் நச்சுப் புகை நோயை உண்டாக்கும்.
iii. பொலித்தீன் விரைவாக உக்கும் தன்மை உடையது.

23. மரச்செதுக்கல் வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் மரம் எது?

i. கருங்காலி ii. புளிய மரம்
iii. வேம்பு மரம்

24. நீராவியில் அவித்து உண்ணும் உணவு அல்லாதது.

i. பிட்டு ii. இடியப்பம்
iii. றொட்டி

25. மேசை ஒன்றின் நீளம் 2 மீற்றர், அதன் அகலம் 75 சென்றி மீற்றர் ஆகும். மேசையின் சுற்றளவு ....

தீர்க்குக.

26. 7cm + 4cm - 90mm = ...mm

27. 30mm + 50mm - 7cm = ...mm

பின்வரும் பூக்களின் பெயர்களை எழுதுக.

(கார்த்திகைப்பூ, அகத்திப்பூ, நிலோற்பலம், சூரியகாந்தி, கடல்மா)

28.
....

29. 
....

30. 
....

31. 
....

32. இச் சதுரமுகியிலுள்ள விளிம்புகளின் மொத்த நீளம் யாது?



i. 80cm
ii. 120cm
iii. 40cm

33. இரண்டு மீற்றர் துணியில் 8 கைக்குட்டைகள் தைக்கலாம். 150 சென்றி மீற்றரில் எத்தனை கைக்குட்டைகள் தைக்கலாம்?

i. 10 ii. 6
iii. 12

34. 7, 9, 12, 16, 21, ... எண் கோலத்தின் வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

35. உடம்பில் பட்டால் சொறியத் தொடங்கும் தாவரம் எது?

i. வேம்பு ii. தொட்டாவாரி
iii. காஞ்சொரி

36. அன்னாசி கூடுதலாக பயிரிடப்படும் பிரதேசம்.

i. கொழும்பு ii. களுத்துறை
iii. காலி

37. கப்பல்கள் கரையை வந்தடைய உதவுவது.

i. விமானம் ii. கலங்கரை விளக்கு
iii. கோபுரம்

38. கிழங்கு வகைகளில் அதிகமாகக் கிடைக்கும் போசணை.

i. புரதம் ii. விற்றமின்
iii. மாப்பொருள்

38. வானவில் காலையில் தோன்றும் திசை.

i. கிழக்கு ii. வடக்கு
iii. மேற்கு

39. வானவில் மாலையில் தோன்றும் திசை.

i. கிழக்கு ii. மேற்கு
iii. தெற்கு

40. பற்கள் இல்லாத பிராணிகள்.

i. ஆமை, தேரை ii. முதலை, ஆமை
iii. எலி, பூனை

41. மழை வருவதை முன்கூட்டியே அறியும் பறவை.

i. காகம் ii. குயில்
iii. மயில்

42. பென்சில் செய்யப் பயன்படும் கனியம்.

i. காபனீரொட்சைட் ii. காரியம்
iii. கல்

பிரித்தெழுதுக.

43. தேரோட்டம் .... + ...

44. நீரோடை .... + ...

45. புற்றீசல் .... + ...

எதிர்க்கருத்து தருக.

46. தாமதம் :...........................

47. குன்று :...........................

48. இருள் :...........................

பின்வரும் வாக்கியங்களில் வினை அடைமொழிக்குக் கோடிடுக.

49. வெள்ளை கொக்கு கௌவிப் பிடித்தது பெரிய மீனை

50. புள்ளிமான் துள்ளிப் பாய்ந்தது.

பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

51. ஆஹா எவ்வளவு பெரிய அற்புதம்.

52. இலங்கை இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஷ் போன்ற நாடுகள் போட்டியில் பங்குபற்றின.

53. நன்றி மறப்பது நன்றன்று என்பது திருக்குறள்.

'அ' பகுதிக்குப் பொருத்தமான விடைகளை 'ஆ' பகுதியில் தெரிவு செய்து அதன் இலக்கத்தை கட்டத்தினுள் இடவும்.

அ

54. அறையில் ஆடியல்லோ	☐
55. தன்னைப்பற்றி தானே கூறுவது	☐
56. ஔவையார்	☐
57. ஒட்டி உறவாடி	☐
58. இலை மறை காய்போல	☐

ஆ

1. மூதுரை
2. உவமைத் தொடர்
3. இணைமொழி
4. சுயசரிதம்
5. அம்பலத்தில் ஆட வேண்டும்.

"எனது மாமா வாங்கித் தந்த கதைப் புத்தகம்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம். எழுவாய் பயனிலை உருப்புகள் பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

1. ....
....
2. ....
....
3. ....
....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழானில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

ஹிஜ்ரி	ரமழான் பிறை	நிகழ்வு
02	17	பத்ர் யுத்தம்
02	29	முஸ்லிம்கள் மீது ஸகாத் விதியாக்கப்படல்
05	05	அகழி யுத்தத்திற்கான தயாரிப்பு வேலைகளை ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மற்றும் ஸஹாபாக்கள் மேற்கொண்டனர்
08	20	மக்கா வெற்றி
08	25	கஃபாவில் வைக்கப்பட்ட சிலைகள் உடைத்தெறியப்பட்டன
09	.....	தபூக் யுத்தம்
10	09	யெமனில் வாழ்ந்த ரம்தான் கோத்திரம் இஸ்லாத்தில் நுழைந்தனர்
11	.....	பாத்திமா நாயகியின் மரணம்
15	.....	காதிஸிய்யா வெற்றி
32	12	அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வபாத்தானார்கள்
40	17	கூபாவில் அலி (ரழியல்லாஹு அன்ஹு) கொலை செய்யப்பட்டார்கள்
58	17	அன்னை ஆஇஷா வபாத்தானார்கள்
89	07	முஹம்மத் பின் காஸிம் தலைமையிலான படை இந்தியாவின் சிந்துப் பிரதேசத்தை வெற்றி கொண்டது
91	09	தாரிக் பின் ஸியாத் தலைமையிலான முஸ்லிம்கள் ஸ்பெய்னிய ஆட்சியாளரான ரொட்ரிக்கை வெற்றி கொண்டனர்
94	30	தளபதி மூஸா பின் நுஸைர் மெட்ரிட் நகரை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்
132	.....	அப்பாஸிய ஆட்சி ஆரம்பம்
361	.....	ஜாமிஉல் அஸ்ஹர் நிர்மாணப் பணி பூர்த்தி
362	23	முஸ்லிம்கள் பைஸாந்திய பேரரசை வெற்றி கொண்டனர்
584	21	சிலுவை வீரர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த சிரியா சுதந்திரமடைந்தது
588	22	ஸலாஹுதீன் அய்யூபி தலைமையிலான முஸ்லிம் படை சிலுவை வீரர்களை தோற்கடித்து பைதுல் மக்திஸை மீட்டெடுத்தது

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 மாணவர்களின் வெற்றியின் இரகசியம்

நந்தவனம்

எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள்
24 (விடைகளுடன்)

ஆசிரியர் ஏ.எஸ். ஜௌபர்

Rs:320.00

ஏனைய வெளியீடுகள்...



Rs: 220.00

Rs: 300.00

Rs: 300.00



Rs: 450.00

Rs: 150.00



Rs: 300.00



Rs: 125.00

Rs: 300.00



Rs: 180.00

Rs: 350.00



Rs: 250.00

Rs: 265.00

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, Dematagoda Road, Colombo 09.

Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org